விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள்: பத்து

வலம்புரி

Valampurii

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 04 புதன்கிழமை (16.04.2008) தொலைபேசி. 222 3378, 222 7829 ஒலி 119



யாழ்.முன்னரங்கப் பகுதியூடாக விரைவில் பாரிய படை நடவடிக்கை

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறுகிறார்

(கொழும்பு)

மன்னார், மணலாறு முனைகளில் படிப்படியான முன்னேற்றத்துடன் எதிரிகளை அழித்து வரும் எமது படைகள் யாழ்ப்பாண முன்னரங்கில் விடுதலைப் புலிகள் இதுவரை சந்தித்திராத பாரிய படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும்

நோர்வே அரசாங்கம் வேண்டுகோள்

(ஒஸ்லோ)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியா முக்கிய பங்கினை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருக்கும் நோர்வே, சமாதான முன்னெடுப்புக்களில் தாம் தொடர்ந்தும் அனுசரணைப்பணியாளர்களாகச் செயற்படுவதற்கான சூழ்நிலை இன்னமும் காணப்படுவதாக கூறியுள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புபட்ட பிரிவினர் விரும்பும் பட்சத்தில் தொடர்ந்தும் அனுசரணையாளர்களாக பணியாற்ற தாம் தயாராக இருப்பதாக இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

நாம் எப்போதும் (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?

அமெரிக்காவின் வரவு-செலவுத் திட்டத்தில் இலங்கைக்கான உதவித் தொகை குறைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் வெளிநாடுகளுக்கான 2009ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைக்கான உதவித் தொகையை குறைத்துள்ளதாக அறிவித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் இணைந்து வெள்ளை மாளிகையின் வரவு- செலவுத் திட்ட பிரிவு தயாரித்த வெளிநாடுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தை கடந்த வாரம் அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலீஸா ரைஸ் வெளியிட்டு வைத்தார்.

2007 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான அபிவிருத்திகளை (10 ஆம் பக்கம் பார்க்க)

மடுத் தேவாலயத்தைப் பாதுகாக்குமாறு இணைத் தலைமைகளிடம் கோரிக்கை

(கிளிநொச்சி)

இராணுவத்தின் தாக்குதலில் இருந்து மடுத் தேவாலயத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நோர்வேயூடாக இணைத் தலைமை நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மடுத் தேவாலயத்தை இலக்கு வைத்து இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் குறித்த எமது கவலையை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் விசேட சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்மின் கவனத்துக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

எனது தந்தையை ஏன் கொன்றார்கள்? நளினியைச் சந்தித்த பிரியங்கா கதறல்

(சென்னை)

மனித வெடிகுண்டு மூலம் 1991 ஆம் ஆண்டு மே மாதம் கொலை செய்யப்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா கொலைச் சம்பவம் தொடர்பாக தண்டனை பெற்று வேலூர் சிறையிலுள்ள நளினியை அண்மையில் சந்தித்துப் பேசியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டதை பிரியங்கா உறுதிப்படுத்தியுள்ளார். பிரியங்கா காந்தி, கடந்த மாதம் 19 ஆம் திகதி மிகவும் இரகசியமாக தனி விமானத்தில் தமிழகம் வந்தார். சென்னை விமான நிலையத்திற்குள் இருந்து காரில் அவர் அழைத்துச் செல்லப் பட்டார்.

அவரது வருகையை தமிழகப் பொலிஸாருக்குக் கூடத் தெரிவிக்காமல் மத்திய உளவுப் பிரிவு அதிகாரிகள் மிகமிக இரகசியமாக வைத்திருந்தனர். சென்னையிலிருந்து காரில் சிறிபெரும்புதூர் சென்ற பிரியங்கா, அங்கு ராஜீவ் காந்தி நினைவிடத்தில் சுமார் 30 நிமிடங்கள் தியானம் செய்தார்.

பிறகு ஸ்ரீபுரம் (10 ஆம் பக்கம் பார்க்க)

'வடக்கின் பெரும் போர் - 2008'

யாழ்.மத்திய கல்லூரி VS சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ்.மத்திய கல்லூரி மைதானம்

ஏப்ரல் 17,18 மற்றும் 19 ஆம் திகதி

உத்தியோகபூர்வ ஊடக அனுசரணை:-

வலம்புரி

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மதவாச்சி ஊடான போக்குவரத்திற்கு தமிழ்ப் பயணிகளுக்குத் தடை விதிப்பு

(கொழும்பு)

மதவாச்சி சோதனை சாவடியில் வடபகு தியிலிருந்து செல்லும் தமிழ்ப் பயணிக ளுக்கு போக்குவரத்து அனுமதி மறுக்கப்பட் டுள்ளது.

இதனால் தமிழ்ப் பயணிகள் பெரும் இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளனர். ஜெய ராஜ் பொன்னாண்டோ புள்ளே கொல்லப்பட்ட பின்னர் மதவாச்சி சோதனை நிலையத்தை மூடிய படையினர் அதனை தற்போது திறந் துள்ள போதும் தமிழ்ப் பயணிகளுக்கு அப் பாதை ஊடான போக்குவரத்து அனுமதியை மறுத்திருக்கின்றனர்.

எனினும் சிங்கள பயணிகளை மதவாச்சி ஊடாக தொடர்ந்தும் பயணத்தை மேற் கொள்ள படையினர் அனுமதி வழங்கி யுள் ளனர்.

மதவாச்சி ஊடாக தமிழ்ப் பயணிகள் பய ணிக்க முடியாது என்று பயணிகளை திருப்பி அனுப்பும் படையினர் புகையிரதத்தில் வேண்டுமானால் தமிழர்கள் பயணிக்கலாம் என்றும் கூறியுள்ளனர்.

தமிழ்ப் பயணிகள் கடுமையாக நடத்தப் படுவது குறித்து அப்பாதை ஊடாகப் பய ணிக்கும் பல்வேறு தரப்பினரும் தமது விச னத்தை தெரிவித்த போதும் படையினர் தமிழ்ப் பயணிகளை மதவாச்சி ஊடாக அனுமதிப் பதில்லை என்ற தமது முடிபில் மாற்றம் இல் லை என்றும் தெரிவித்துள்ளனர்.

புகையிரதத்தில் பயணிக்காத இடங் களில் வசிக்கும் தமிழ்ப் பயணிகளுக்கு கூட இத்தகைய போக்குவரத்து அனுமதி மறுக் கப்பட்டுள்ளதால் அவர்கள் தமது பயணத் தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள் ளனர். (ச-5)

குடியேற்ற விசா நடைமுறைகளை மீளாய்வு செய்கிறது அவுஸ்திரேலியா

(கொழும்பு)

குடியேற்ற விசா நடைமுறைகள் குறித்த விவகாரங்களை மீளாய்வு செய்யவுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆய்வு செய்ய அவுஸ் திரேலிய தொழிலாளர் நல ஆணையாளர் பார்பரா டீகன் தலைமையில் குழுவொன் றும் நியமிக்கப்பட்டுள்ளது. விசா பிரச்சினை கள், தொழிலாளர்களின் பிரச்சினைகள், ஆங்கில அறிவு தொடர்பான தேவைகள் சம்பள விகிதம் உள்ளிட்டவை குறித்து பார் பரா தலைமையிலான குழு ஆய்வு செய்ய வுள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய குடியேற்றப் பிரிவுத் துறை அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் கூறுகையில், தொழிலாளர் தொழிற்சாலை உறவு குறித்த துறையில் பார்பராவுக்கு நல்ல அனுபவம் உள்ளது. எனவே அவரால் இந்த குடியேற்றப் பிரச்சினைகள் குறித்து சுமுக தீர்வைப் பரிந்துரைக்க முடியும் என்றார்.

விசா முறைகேடுகளை களைதல், விசா வழங்கும் நடைமுறையில் மாற்றங்களை கொண்டு வருவது குறித்தும் பார்பரா ஆய்வு செய்யவுள்ளார்.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள், தொழி லாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் அவர் ஆலோசனைகளை மேற்கொள்ளவுள்ளார்.

இதேபோன்று வெளிநாடுகளிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களுக்கு ஆங்கில அறிவு போதிய அளவுக்கு இருக்கிறதா என்பதையும் இந்தக் குழு ஆராயவுள்ளது. (ஞ-5)

பனிக்கன்குளத்தில் விமானத் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்காவிலுக்கு தெற்கே பனிக்கன்குளப் பிரதேசத்தில் இரகசியமாக இயங்கிய புலிகளின் தொலைத் தொடர்புத் தளம் ஒன்றின் மீது நேற்று பிற்பகல் விமா னப் படையின் ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்திய தாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரி வித்தன.

அடையாளம் காணப்பட்ட இலக்கு மீது நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப்படை பேச்சாளர் கொமாண்டர் அன்ரூ விஜேசூரிய தெரிவித்தார்.

புலிகளின் இந்த இரகசிய தொலைத் தொடர்பு தளம் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி விமானப்படையினர் நடத்திய தாக்குதல் ஒன்றில் அழிக்கப்பட்ட போதும் அதே இடத்தில் புலிகள் மீண்டும் இயங்குவதாக கிடைத்த புலனாய்வுத் தகவ லை உறுதி செய்த பின்னரே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலக்கு துல்லியமாக தாக்கியழிக்கப் பட்டதை விமானி உறுதிப்படுத்தியுள்ளதாக விமானப்படை பேச்சாளர் மேலும் தெரிவித் தார். (ச-5)

யாழ்.பல்கலைக்கழக அணி ஹொக்கிப் போட்டியில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்த ஹொக்கிப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

றொகான் இராஜசிங்கம் கிண்ணத்துக் கான இறுதிப்போட்டி நேற்று யாழ்.பல்க ல்லைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கிராஸ் கொப்பேர்ஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது. இதில் பல்கலைக்கழக உடற்கல்வி அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (ச)

அருணலு பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை யினால் வருடாந்தம் நடத்தப்படும் அருணலு பரிசளிப்பு வைபவம் இன்று மாலை 4 மணி யளவில் யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந் துள்ள வங்கிக் கிளையில் நடைபெறவுள் ளது.

இதில் 2007 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண் டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாம், 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களைப் பெற்ற 5 மாணவர்களுக்கு முறையே 10 ஆயிரம், 7ஆயிரத்து 500, 5ஆயிரம் ரூபா அவர்க ளின் பெயரில் வைப்புச் செய்து அதற்கான சான்றிதழ்கள் பரிசாக வழங்கப்படவுள்ளது. (ச)

R.V.A INTERNATIONAL MARRIAGE BUREAU

வெளிநாட்டில் வசிக்கும் PR உடைய றோமன் கத்தோலிக்க மதத் தைச் சேர்ந்த 1975-1985க்கு உட்பட்ட ஆண்கள், பெண்களுக்கு உள்நாட்டி லும் வெளிநாட்டிலும் வசிக்கும் மண மகன், மணமகள் தேவை. விண்ணப் பிக்க விரும்புவோர் எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ராஜா மாதா திருமண சேவை
இல.70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
T.P:- 0779564944

கண்காட்சியும் விற்பனையும்

உலக புத்தக தினத்தினை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் பிரதான நூலகத்தில் இன்று புதன் கிழமை முதல் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஸ்ரீ லங்கா புத்தக சாலையினரால் மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும் நடாத்தப்பட உள்ளது.

அனைத்துப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், வாசகர்கள் அனைவரும் இக் கண்காட்சியை பார்வை யிட்டு பயன் பெறுமாறு சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்துள்ளார். (ச-29)

புத்தாண்டு தினத்தில் புட்டபத்தியில் சாயிபாபாவிடம் ஆசி பெற்றார் ரஜனி



சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு நடிகர் ரஜனிகாந் புட்டபத்தி சென்று சாயி பாபாவிடம் நேரடி ஆசி பெற்றுள்ளார்.

நடிகர் ரஜனிகாந் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணியளவில் புட்ட பத்தியில் உள்ள பிரஷாந்தி நிலையத் திற்கு சென்று அங்குள்ள குல்வந்த் மண்டபத்தில் சுமார் ஒரு மணிநேரம் காத்திருந்து சாயிபாபாவிடம் நேரடியா கவே சித்திரைப் புத்தாண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆராத்தி நிகழ்ச்சியை காண்பதற்காக ஏனைய பக்தர்களுடன் கலந்து கொண்டார். (ஓ-5)

பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள அனைத்து சிம்பாவே மக்களுக்கும் அழைப்பு

(சிம்பாவே)

சிம்பாவேயில் கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலின் முடிபை உடனடியாக வெளியிட வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் நிரா கரித்துள்ளது.

ஜனநாயக மாற்றத்துக்கான அமைப்பு என்கிற எதிர்க்கட்சியினர் ஒரு வாரத்துக்கு முன்னர் தாக்கல் செய்த அவசர மனுவை நீதி பதி நிராகரித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடை பெற்ற தேர்தலில் தமது வேட்பாளரான மார் கன் சாங்கிராய் அவர்களே வெற்றி பெற்றார் என அந்த அமைப்பு எண்ணுகிறது.

மேலும், நடைபெற்ற தேர்தல்களில் அதி பர் றொபேட் முகாபே முறைகேடுகள் செய்ய முயற்சிப்பதாகவும் எதிர்க்கட்சியான அந்த அமைப்பு கூறுகிறது.

இதனிடையே தேர்தல் முடிபுகளை அறி விக்கும் காலதாமதத்துக்கு எதிர்ப்பு தெரி வித்து நடைபெறவுள்ள பொது வேலை நிறுத் தத்தில் அனைத்து சிம்பாவே மக்களும் கலந்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மாற்றத்துக்கான அமைப்பு அழைப்பு விடுத் துள்ளது. (ஓ-5)

காற்று மாசுபடுவதனாலேயே பூக்களின் வாசனை குறைகிறது

(லண்டன்)

பூச்செண்டுகளின் வாசனை குறைவாக உள்ளதற்குக் காரணம் ,காற்று மாசுபடுவ தனால் தான் என்று லண்டனில் நடத்தப்பட்ட ஆய்வில் கூறப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள வெர்ஜினியா பல்கலைக்கழகத்தில் பூக்களின் வாசனை குறைவது பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. இதில் காற்று மாசுபடுவதனா லேயே பூக்களின் நறுமணம் குறைகிறது என கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்து ஆய்வில் கூறப்பட்டுள்ளதாவது,

பெருகிவரும் வாகனம் மற்றும் தொழில் துறை காரணமாக உலகில் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகிறது. மின்சார தொழிற்சாலை மற்றும் வாகன போக்குவரத்தி னால், ஏற்படும் அசுத்த காற்று, பூக்களின் நறு மணத்தை 90 சதவீதம் வரை பாதிக்கிறது. பூக்களின் நறுமணத்தின் மூலமே வண்டுகள் மகரந்த சேர்க்கையில் ஈடுபடும். பூக்களின் நறுமணம் பாதிக்கப்பட்டால், மகரந்த சேர்க் கையும் பாதிக்கப்படும்.

தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகு திகளில் பூக்கும் பூக்களில் வாசனை குறைவா கவே உள்ளது.

இதனால் ,அதன் இனப்பெருக்கமும் அதி களவு பாதிக்கப்படுகிறது. இதன் காரணமா கவே, நகரங்களில் அதிகளவு வண்டுகளைக் காண முடிவதில்லை. காற்று மாசுபாத இடத்தில், பூக்கும் பூக்களின் நறுமணம் ஆயிரம் மீற்றரில் இருந்து ஆயிரத்து 200 மீற்றர் வரை வீசும். ஆனால், தொழிற்சாலைகள் அதிக முள்ள இடங் களில் பூக்கும் பூக்களின் வாசனை 200 மீற் றரில் இருந்து 300 மீற்றர் வரை தான் வீசு கிறது. (ஓ-5)

ஈராக்கின் தலைநகரில் பாரிய மனிதப் புதை குழி

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின்வடக்கே 20 முதல்30 சடலங்களைக்கொண்ட பாரிய மனிதப் புதை குழி, அமெரிக்க படையி னரால் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க இராணு வம் நேற்று முன்தினம் அறிவித் துள்ளது.

முதாகிதா நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டுபிடிக்கப்பட்ட புதை குழியில் உள்ள அனைத்து சடலங்களும் மோசமான முறையில் சிதைவடைந்துள்ளதாகவும் இச் சடலங்கள் 8 மாதங்களுக்கு முன் புதைக்கப் பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ஓ-5)

உலக தினசரி

கென்யாவின் புதிய பிரதமராக ஒடின்கா ஜனாதிபதி மாவெய் கிபாகியால் அறிவிப்பு

கென்ய ஜனாதிபதி மாவெய் கிபாகி புதிய அதிகாரப் பகிர்வு அமைச்சரவை நியமனங் கள் தொடர்பான அறிவிப்பை செய்துள்ளார்.

நீண்ட கால அரசியல் நெருக்கடியை முடி வுக்கு கொண்டு வரும் வகையில் எதிர்க் கட்சி யினருடன் ஆளுங்கட்சியினர் செய்து கொண்ட உடன்படிக்கை யொன்றையடுத்தே இவ்வறி விப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

கடந்த சனிக்கிழமை ஆளுங்கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சியினருக்கிடையே மேற் கொள்ளப்பட்ட இரகசிய பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரெய்லா ஒடின்கா புதிய பிரதமராக ஜனாதிபதி பதி மாவெய் கிபாகியால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் ஜனாதிபதி தேர்தலின் பிற் பாடு கென்யாவில் இடம்பெற்ற வன்முறைக ளில் 1500 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் கிபாகி ஒடின்காவுடன் தொலைக் காட்சிக்கு வழங்கிய நேரடி ஒளி பரப்பு பேட்டியின்போது நாங்கள் அரசியலை ஒரு புறமாக புறந்தள்ளி வைத்துவிட்டு இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. அமைதியும் சுதந்திரமுடைய ஒரு புதிய கென் யாவை கட்டமைக்க வேண்டிய கடப்பாட்டில் நாங்கள் உள்ளோம் என்று தெரிவித்தார்.

அதேசமயம் கிபாகியின் தேசிய ஜக்கிய கட் சியைச் சேர்ந்த உஹுறு கென்யத்தா மற்றும் ஒடின்காவின் ஒரேஞ் ஜனநாயக இயக்கக் கட்சியைச் சேர்ந்த முஸாலியா முதாவடி ஆகி யோர் பிரதிப் பிரதமர்களாக பெயர் குறிப்பிடப் பட்டுள்ளனர். உஹுறு கென்யத்தா கென்யா வின் முதலாவது ஜனாதிபதி ஜொமோ கென் யத்தாவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சுமார் 40 அமைச்சு பதவிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (ஓ-5)

இன்று ஒரு தகவல்

நட்புக்கு யோசனைகள்

''எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம். அதற்கு உங்களைக் கேட்டு விளக்கம் பெறலாம் என வந்திருக் கிறேன்'' என்று கூறிக்கொண்டே நண்பர் ஒருவர் வந் தார். ''என்ன சந்தேகம்?'' என்று கேட்டேன். ''என்னை யார் பார்த்தாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டே போய் விடுகிறார்கள். என்னிடம் பிரியமாகப் பேசுகிற நண்பர் ஒருவர் கூடக் கிடையாது'' என்றார். ''உங்களிடம் ஏதோ குறை இருப்பதாகத் தெரிகிறது. உங்கள் பழக்கவழக் கங்களை கொஞ்சம் மாற்றிக் கொண்டால் எல்லாம் சரி யாகப் போய்விடும்'' என்றேன். உங்களுக்கு நிறைய நண்பர்கள் தேவை. அப்படியான நண்பர்களைப் பெற வேண்டுமானால் அதற்கு சில உத்திகள் இருப்பதாக அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் சொல்லியிருக்கிறார் என்றேன். ''யார் அவர்? என்ன சொல்லி யிருக்கிறார்?'' என்று கேட்டார் நண்பர்.

''டேல் கார்னஜி'' என்ற அமெரிக்க எழுத்தாளர் நல்ல நண்பர்களைப்பெற என்ன சொல்லியிருக்கிறார் தெரி யுமா? எப்பொழுதும் நம்மைப் பற்றியே பேசிக் கொண்டி ருக்கக்கூடாது. நமக்கு முன் இருப்பவர்கள் நிறையப் பேசுவதற்கு வாய்ப்புக்கொடுக்க வேண்டும். அவர் கூறு கிற விஷயம் எதுவாக இருந்தாலும் எப்படி இருந்தாலும் ''ஆமாம்'' என்று சொல்லி ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இரண்டாவது, யாரிடமும் அனாவசியமாக விவாதம் செய்துகொண்டு இருக்கக் கூடாது. அடுத்தது, எந்தப் பிரச்சினையையும் அடுத்தவர் கண்ணோட்டத்திலேயே பார்க்க வேண்டும். நான்காவது, ஒருவரோடு பேச ஆரம் பிக்கும் போது, இயல்பாக, அன்பாக ஆரம்பிக்க வேண்டும். உங்களுக்கு இந்த சட்டை நன்றாக இருக்கிறதே என்று ஆரம்பிக்கலாம். அதை விட்டு விட்டு? ''என்ன சட்டைசார் இது... பார்க்கச் சகிக்க வில்லை'' என ஆரம்பிக்கக் கூடாது. ஐந்தாவது நம் தவறுகளை தயக்கம் இல்லாமல் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஒரு தவறைச் செய்துவிட்டு அதற்கும் நமக்கும் சம் பந்தமில்லாதது மாதிரி பேசிக்கொண்டிருக்கக் கூடாது. அடுத்தவர்கள் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். நீங்கள் சொல்வது தப்பு என அவர் முகத்தில் அடித்தாற் போல் சொல்லக்கூடாது.

ஏழாவது, நமது கருத்து எதுவோ அதை எதிராளி வாயி லிருந்து வரவழைக்க முயற்சிக்க வேண்டும். அடுத்த தாக எப்பொழுதும், எதற்கும் சவால் விட்டுக்கொண்டிருக் கக்கூடாது. அடுத்தாக, நமது யோசனைகளைப் புதிய முறையில் சொல்லிப் பார்க்கலாம். மற்றவர்கள் சொல் லும் யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பத்தாவது குறிப்பு மிகவும் முக்கியமானது. அதாவது– அநாவசியமாகப் பொய் சொல்லக்கூடாது. எப்பொழு தாவது பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் பெரிய பொய்யாக–நம்பக்கூடிய பொய்யாகச் சொல்ல வேண்டும். தேவைப்பட்டால் சில சமயங்களில் பொய்யை உண்மை யாகக்கூட மாற்றிக்கொள்ளலாம். சில பொய்களை உண் மையாக மாற்ற முடியும். நண்பர்களிடம் எனக்கு கார் ஓட் டத்தெரியும் எனப் பொய் சொல்லிவிட்டு, அவர்கள் ஓட்டிக் காட்டு என்று சொல்வதற்குமுன் ஏதாவது ஒரு டிரைவில் ஸ்கூலிலே சேர்ந்து கார் ஓட்டக்கற்றுக் கொள்ளலாம்.

நல்ல நண்பர்களைத் தேடித்தான் பெற வேண்டும். அவர்கள் சுலபமாகக் கிடைக்க மாட்டார்கள். அந்த எழுத் தாளர் தன் அனுபவம் மூலம் மேற்படி குறிப்புகளை கூறி யிருக்கிறார். இந்த ஆலோசனைகளின்படி நடந்தால் நமக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்! அதன் பின் நமது வாழ்க்கை வெற்றி இருக்கிற திசையை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கும்.

இந்தக் காலத்திலே நண்பர்களிலே எத்தனையோ வகைகள் உண்டு. ஒருவர் மிகவும் கவலையோடு நின்று கொண்டிருந்தார். ஏன் கவலை என்று கேட்டார் மற்றவர். என் நண்பன் ஒருவன் ஏதோ கோபத்தில் உன்னோடு ஒரு வருட காலத்துக்கு பேசமாட்டேன் என்று சொல்லி விட் டான் என்றார் அவர். ''அதற்காகவா கவலைப்படுகிறீர் கள்?'' என்றார் மற்றவர்.

நான் அதற்காக கவலைப்படவில்லை. அவனது ஒரு வருடக்கெடு இன்றோடு முடிவடைகிறது. அதை நினைத் துத்தான் கவலைப்படுகிறேன் என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

ஜே.வி.பியினுள் ஏற்பட்டுள்ள பிளவுக்கு அரசின் ஒத்துழைப்பும் காரணமாகும்

என்கிறார் விஜித்த ஹேரத் எம்.பி.

எமது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிள வுக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் காரணமாகும். இதனை மறுப்பதற் கில்லை. விமல் வீரவன்ச எம்.பி.யுடன் இணைந்துள்ள பலர் எம்முடன் மீண் டும் இணைவது குறித்து பேச்சு நடத்தி வருகின்றனர். விரைவில் வீரவன்ச எம்.பி. தனிமைப்படுத்தப்படுவது உறுதி என்று ஜே.வி.பி.யின் முக்கி யஸ்தரும் எம்.பியுமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து வீரவன்ச எம்.பி.அமைச்சுப் பதவி யினை பெறப்போகின்றாரா? இல் லையா? என்பதை தற்போதைக்கு கூறமுடியாது. ஆனால் காலம் கடந்த பின்னர் எதுவும் நடக்கலாம் என்றும் அவர் கூறினார். ஜே.வி.பிக்குள் தோன் றியுள்ள முரண்பாடு குறித்து 'கேசரி' க்கு கருத்துத் தெரிவித்த விஜித்த ஹேரத் எம்.பி.மேலும் கூறி யதாவது,

விமல் வீரவன்ச எம்.பி.யும் அவ ரது சாகக்களும் தம்மை ஏமாற்றி விட் டதாகவும், பிழையாக வழி நடத் தப்பட்டதாகவும் இதனை தற்போது புரிந்து கொண்டு மீண்டும் பிரதான கட்சியுடன் இணைய தயாராகவுள் ளதாகவும் விமலுடன் சென்ற பலர் எமக்கு தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பிழையை உணர்ந்த பலர் சில மத்தியஸ்தர்களுடன் இணைந்து தற்போது பேச்சுவார்த்தை களை நடத்தி வருகின்றனர். இப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற்றுள்ளன. எனவே இவ்வார இறுதிக்குள் பலர் மீண்டும் எம்முடன் இணையவுள்ள னர். எத்தனை பேர் இணைகின்ற னர் என்ற எண்ணிக்கையை தற் போது வெளியிடமுடியாது.

கட்சிக்குள் இவ்வாறான நிலை மையை உருவாக்க அராசாங்கத் தின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது. இது மறுக்கப்பட முடியாத உண்மை யாகும். இதுவரையில்மீண்டும் இணை வது தொடர்பாகவோ தன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவோ கட்சியுடன் விமல் வீரவன்ச பேச்சு வார்த்தை நடத்தவில்லை.

அரசாங்கத்துடன் இணைந்து விமல் வீரவன்ச எம்.பி.அமைச்சர் பதவி பெறப்போகின்றாரா இல்லையா என்பதை கூறமுடியாது. ஆனால் காலம் கடந்து இது நடக்கும். இப் போதல்ல, எப்போதும் அவர் அரசாங் கத்தின் சார்பாகவே இருக்கின்றார்.

விமல் வீரவன்ச இல்லாவிட்டால் ஜே.வி.பி.இல்லை. அவரே கட்சி எனக் கூறப்படும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை நிரா கரிக்கின்றோம். எமது கட்சியின் அரசி யல்பீட தீர்மானங்களை கொள்கை களை மக்களுக்கு தெளிவு படுத்தும் பிரசார செயலாளர் பதவியையே அவர் வகித்து வந்தாரே தவிர அவர்தான் கட்சியல்ல. தனிப்பட்டவர்கள் எவருக் கும் ஜே.வி.பி.என்பது தனிப்பட்ட சொத் தல்ல. எமக்கென்று கொள்ளைகள் உள்ளன.

பிழையான வழி நடத்தலின் கீழ் பின் சென்றோர் எல்லோரும் 'எம் முடன் இணைவார்கள். இறுதியில் விமல் தனித்துவிட வேண்டிய துர்ப் பாக்கிய நிலைமையே உருவாகும். உண் மையை உணர்ந்தவர்கள் இணைகிறார்கள். குற்றச்சாட்டுக்கள் உள்ளோர் பின் நிற்கிறார்கள் இது தான் உண்மையாகும். (ஓ)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநரை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு சந்தித்து வடக்கு மாகாண ஆசிரியர்கள் மற்றும் கல்வி அபிவி ருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியது.

10ஆம் திகதி வியாழக்கிழமை திருகோணமலையில் உள்ள வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத் தில் நடைபெற்ற சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவண பவானந் தன் மற்றும் எஸ்.செந்தில் நாதன் ஆகி யோரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங் கோவன், வடக்கு பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண பாடசாலை களில் கல்வி அபிவிருத்தி நடவடிக் கைகள், கட்டட நிர்மாணப் பணிகளுக் கான மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு, இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மேல் மாகாணத் தில் தற்காலிக இணைப்பு பெற்ற ஆசி ரியர்களின் பிரச்சினைகள் தொடர் பாக கலந்துரையாடப்பட்டன.

ஆளுனருடனான சந்திப்பு பயனு டையதாக அமைந்ததோடு ஆளு நர் வடக்கு மாகாண ஆசிரியர் களின் பிரச்சினைகள் தொடர்பாக புரிந் துணர்வுடன் செயற்பட அதிகாரிக்கு ஆலோசனை வழங்கி இருப்பதாக வும் மாணவர்களின் கல்விச் செயற் பாடுகளில் பாதிப்புக்கள் உடனடியா கக் கவனத்தில் எடுக்கப்பட்டுஅவற்றை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங் கியிருப்பதாகவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செய லாளர் எஸ்.சரவணபவானந்தன் தெரி வித்தார். (ஓ)

இராசிபலன்

16.04.2008
(சித்திரை 04, புதன்கிழமை)
மகம் முற்பகல் 10.41 மணிவரை
ஏகாதசி பிற்பகல் 01.20 மணிவரை
இராகுகாலம் 12.04-01.34 மணிவரை
சுபநேரம் 04.34-06.04 மணிவரை
ஏகாதசி விரதம்

மேடம்	அஜீரணரோகம், தாழ்ந்த சுபா வம், வேலைச்சுமை, காரியதாமதம்.
இடபம்	கல்வியில் ஆர்வம். அற்பர் உறவு, சுபசெலவு, வாகனசுகம்.
மிதுனம்	நாகரீகம், கூட்டுமுயற்சி, தேக [illegible] விருந்துபசாரம்.
கடகம்	[illegible]ம், வேலைச்சுமை, தன விரயம், காரிய தாமதம்.
சிங்கம்	வெகுமானம், சயனசுகம், அதிக பிரயாசை, கற்பனை மிகுதி.
கன்னி	காரிய அலைச்சல், பிதாசிந்தை, பெரியோர் சந்திப்பு, சுபசெலவு.
துலாம்	மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்க்கை.
விருச்சிகம்	நன்கொடை, பெரியோரால் மதிக் கப்படுதல், தூரதேசச்செய்தி.
தனுசு	எதிர்பாராத செலவு, இடமாற்றம், புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை.
மகரம்	பொருள்விரயம், காரியதடங்கல், ஆரோக்கியக்குறைவு.
கும்பம்	செல்வாக்கு, காரியநன்மை, பண வருவாய், நண்பர்கள் சந்திப்பு.
மீனம்	சத்துரு ஜெயம், திடீர்பயணம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும்.

வ ள வ ன்



பாலகணபதி துணை

அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
6ஆம் நாள் மஞ்சத்திருவிழா
(16.04.2008)

தொடர்வினையும் படர்பகையும் இடருந்தொலைய
தடையகற்றி திடமார் துணையாவான் - படையாளும்
பூதவயிற்றுப் பஞ்சமுகன் பிஞ்ஞகன்றன் பாசமுறும்
போதமிகும் ஆலடிப் பாலகனே

ஆற்றுவாய் துயர் போக்குவாய் ஆக்குவாய் நலம்
ஆனை முகனே என்றியம்பி வந்தோம் வாசலுக்கே
தேற்றுவாய் எமையென்று போற்றினோம் உனை
ஆலடியாளும் ஐங்கரனே ஆறுதல் தந்திடுவாய்
வேற்றுருவாய் மாறுமுகம் கொண்ட கணபதியே
பார்த்திடுவாய் பஞ்சமுகத்து ஐந்து கரத்தவனே
வீற்றிருப்பாய் மூஷிகத்தில் கொற்றவனாய் ஆலடியில்
காத்திடுவாய் கணபதியே கழல் பணிந்தோமே

(1052) அல்வாயூர் சி.சிவநேசன்

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்லமெய் வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்பலவாணர் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (பரு.நிருபர்)

பரு.பங்கு மக்கள் நடாத்திய செபமாலைப் பேரணி

(பருத்தித்துறை)

மடு ஆலயப் பிரதேசத்தை அமைதிப் பிரதேசமாக்கி மடு அன்னையின் திருச் சொரூபத்தினை மீண்டும் பழைய இடத்தில் அமைத்து வழிபாட்டுக்கு வழி வகுக்க வேண்டுமென கோரி பருத்தித்துறை மக்கள் அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் கேட்டுக் கொள்கின்றனர்.

இது சம்பந்தமாக செபமாலைப் பேரணி ஒன்றை நடாத்தினர். பருத்தித்துறை தோமையர் ஆலயத்தில் விசேடபூசைகள் ஆராதனைகளையடுத்து இச்செபமாலைப் பேரணி ஆரம்பமாகியது.

பரு.பங்குத்தந்தை அருட்திரு போ்ணாட் நெட்ணோ அடிகளார் தலைமையில் நடைபெற்ற இச் செபமாலைப் பேரணியில் பருத்தித்துறை உதவிப் பங்குத் தந்தை அருட்திரு யூட்தாஸ் அடிகளார் அருட்திரு டேமியன் அடிகளார் ஆகியோருடன் பருத்தித்துறை பங்கைச் சோ்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இச் செபமாலைப் பேரணி 4ஆம் குறுக்குத்தெரு தும்பளை வீதியூடாக தும்பளை லூர்து மாதா தேவாலயத்தை வந்தடைந்தது. லூர்து மாதா ஆலயத்தில் நற்கருணை ஆராதனைகள் இடம்பெற்றன.

இம்மக்கள் மன்னார் ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு யோசெப் ஆண்டகைக்கு தமது கோரிக்கையை பக்ஸ் மூலம் அனுப்பிவைத்துள்ளனர். (அ-52)

மெய்வல்லுநர்களுக்கான பரீட்சைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடாத்தப்படும் மெய்வல்லுநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவியேற்றப் பரீட்சைக்கான கருத்தரங்கு தென்னிலங்கை விரிவுரையாளர்கள் மூலம் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று புதன்கிழமை மாலை 2 மணிக்கும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளது.

அத்துடன் வகுப்பு 1V பரீட்சைக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளது. எனவே பரீட்சார்த்திகள் மற்றும் மெய்வல்லுனர் உத்தியோகத்தர்களான ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது. (ஓ-7)

செயலமர்வும் கலந்துரையாடலும்

(ஊர்காவற்றுறை)

தீவக கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான வலய நிலை கல்வி மேம்பாடு தொடர்பான செயலமர்வும், கலந்துரையாடலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வேல்ணை மத்திய கல்லூரியில் நடைபெறுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

வலிமேற்கு பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வலிமேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வெற்றிபெற்றோரின் விபரங்கள் வருமாறு,

கட்டுரை கனிஷ்ட பிரிவு (வரையறை)

1ஆம் இடம்:- தே.காயத்திரி- விக்ரோரியாக்கல்லூரி சுழிபுரம், 2ஆம் இடம்:- தே.துவாரகன்- விக்ரோரியாக்கல்லூரி சுழிபுரம், 3ஆம் இடம்:- ம.கார்த்திகா-விக்ரோரியாக்கல்லூரி சுழிபுரம்.

கட்டுரை சிரேஷ்ட பிரிவு (வரையறை)

1ஆம் இடம்:- உசாந்தினி - விக்ரோரி யாக் கல்லூரி சுழிபுரம்.

கவிதை கனிஷ்ட பிரிவு (வரையறை)

1ஆம் இடம்:- கெ.வினோயா-வட்டு மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை, 2ஆம் இடம்:- சி.டினோதினி -வட்டு மத்திய கல்லூரி வட்டுக் கோட்டை,, 3ஆம் இடம்:- வி.ஸ்ரீமாதங்கி - வட்டு மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை.

கவிதை சிரேஷ்ட பிரிவு (வரையறை)

1ஆம் இடம்:- வ.தனுசாந்தி - விக்ரோரி யாக்கல்லூரி சுழிபுரம், 2ஆம் இடம்:- க.ஞான சவுந்தரி-வட்டு இந்துக் கல்லூரி சித்தன் கேணி, 3ஆம் இடம்:- மிருணாளினி - விக் ரோரியாக்கல்லூரி சுழிபுரம்.

சிறுகதை கனிஷ்டபிரிவு (வரையறை)

1ஆம் இடம்:-ம.கீமா-வட்டு இந்துக் கல்லூரி சித்தன்கேணி, 2ஆம் இடம்:- பி.துஷ்யகாந்தி - வட்டு இந்துக் கல்லூரி சித்தன் கேணி, 3ஆம் இடம்:- நா.டர்சிகா- வட்டு இந்துக் கல்லூரி சித்தன்கேணி.

சிறுகதை சிரேஷ்ட பிரிவு (வரையறை)

1ஆம் இடம்:- உ.சுகிர்தா- விக்ரோரியாக் கல்லூரி சுழிபுரம், 2ஆம் இடம்:- துஷிதா - கண்ணகி அம்மன் அறநெறி பாடசாலை, வட்டு கிழக்கு, 3ஆம் இடம்:- உ.கார்த்திகா - வெல்வில் அறநெறிப் பாடசாலை சங்கானை.

கவிதை (திறந்த)

1ஆம் இடம்:- ப.பத்மநிருபா- முருக மூர்த்தி வீதி, சங்கானை, 2ஆம் இடம்:- ந.குகபரன்- மாதர் சங்க வீதி, சித்தங்கேணி, 3ஆம் இடம்:- பூ.ஜெயமலர்- மல்லாகம் வீதி, சங்கானை.

சிறுகதை (திறந்த)

1ஆம் இடம்:- ப.பத்மநிருபா-முருகமூர்த்தி வீதி, சங்கானை, 2ஆம் இடம்:- பூ.ஜெயமலர்:- மல்லாகம் வீதி, சங்கானை, 3ஆம் இடம்:- ச.கங்கா-பிரதான வீதி, சங்கானை.

பாடல் எழுதும் போட்டி (திறந்த)

1ஆம் இடம்:- க.நல்லதம்பி-துணைவி, வட்டுக்கோட்டை, 2ஆம் இடம்:- பூ.ஜெயமலர் - மல்லாகம் வீதி, சங்கானை, 3ஆம் இடம்:- இ.நிரோசா-தேவாலய வீதி, சங்கானை. (ஓ)

சித்திரா பௌர்ணமி கலைவிழாவும் 1ஆம் ஆண்டு நிறைவு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையும், ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் அற நெறிப் பாடசாலையும் இணைந்து நடாத்தும் சித்திர பௌர்ணமி கலைவிழாவும், அறநெறிப் பாடசாலை 1ஆம் ஆண்டு நிறைவு விழாவும், 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில், அறநெறிப்பாடசாலை அதிபரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமான க.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் சி.மகேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் செஞ்சொற்செல்வன் ஆறு திருமுருகன், வலி மேற்கு கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ரஜனி, வலிமேற்கு கலாசார உதவியாளர் பொ.சந்திரவேல், தொல்புரம் மேற்கு சமூர்த்தி உத்தியோகத்தர் க.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தான பிரதம குரு விஷ்ணுஸ்ரீ ச.சோமஸ்கந்தக் குருக்கள் ஆகியோரின் அருளுரையைத் தொடர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இசை ஆசிரியர் இசைக்கலைமணி பங்கயற்செல்வி முகுந்தனின் இசையரங்கும், கலாகீர்த்தி சாந்தினி சிவனேசனின் நட்டுவாங்கத்துடன் கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கும் நிருத்தியார்ப்பணமும், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் 'பக்த பிரகலாதன்' இசை நாடகமும் இடம்பெறவுள்ளது. (ஓ-7)

க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறை
சிதம்பராக்கல்லூரி

எஸ்.மங்கையற்கரசி (7ஏ, 2பி, சி), எம்.தினேஷ் (4ஏ, 4பி, சி.எஸ்), வி.சக்திதாஸ் (4ஏ, 4பி, சி, எஸ்), எஸ்.கவிதா (2ஏ, 2பி, 2சி, 2எஸ்), எஸ்.வசீகரன் (2ஏ, 4பி, 3சி), ஜெ.செந்தில்குமரன் (ஏ, 2பி, 3சி, எஸ். (ஓ-52)

மீனவர்களுக்கான அறிவுறுத்தல்

(குருநகர்)

குருநகர் கடற்பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்ற எறிகணைத்தாக்குதலில் உயிரிழந்த துரை சாந்தரூபனின் மரணதைத் தொடர்ந்து குருநகர் இறங்குதுறையில் உள்ள படையினருக்கும் குருநகர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று இம்மாதம் 10 ஆம் திகதி இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கப்பிரதிநிதி தெரிவித்துள்ளார். கடல் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட வேண்டாம் என்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தொழிலுக்கு சென்று திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் கடல்அட்டை பிடிப்பதற்கு சப்பாத்துக்கள் கொண்டு போகக்கூடாது என்றும் கேட்கப்பட்டதாக குருநகர் சங்கப்பிரதிநிதி தெரிவித்துள்ளார். (ஓ-1)

சுகாதார சீர்கேடு பற்றி அப்பகுதி மக்கள் கவலை

(குருநகர்)

குருநகர் தொடர்பான குடியிருப்புப் பகுதியில் சுகாதார சீர்கேடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் வடிகால்கள் உடைந்த நிலையில் காணப்படுவதாகவும் குப்பைகள் தேக்கமடைந்து காணப்படுவதாகவும், நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஓ-1)

துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி, தமிழ்ப் புத்தாண்டையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி யொன்றை நடாத்தவுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இந்த 20-20 மென்பந்து துடுப்பாட்டச்சுற்றுப்போட்டி பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்தப்பட வுள்ளது.

இம்மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவிரும்பும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்கள் பருத்தித்துறை இலங்கை வங்கி விளையாட்டுக்கழகச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் தி.ஆனந்த நடேசன் அறிவித்துள்ளார். (ஓ-52)

அதிபர்களுக்கான செயலமர்வு

இடை நிலை கல்வி நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் (ESDFP) கல்வித்துறை சார் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (SEMP) செயற்பாடுகள் தொடர்பான விளக்க செயலமர்வு 19ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.8.30 முதல் பி.ப. 3.30 வரை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

செயலமர்வில் சகல அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ



அமரர் துரைச்சாமி திருஞான சம்பந்தர் ஞாபகார்த்தமாக யாழ். கல்விவலயப் பாடசாலைகளிலுள்ள விசேட தேவையுடைய 80 மாணவர்களுக்கு திருமதி வசந்தா திருஞான சம்பந்தரால் அண்மையில் பால்மா பைக்கற்றுக்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் மாணவர் ஒருவருக்கு ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் (கணிதம்) நா.உலகநாதன் பால்மா வழங்குவதையும், பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். இராசலிங்கம் அருகில் நிற்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்கள் மற்றும் மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

அல்லலுறும் ஈழத்தமிழ் உறவுகளுக்காக தமிழகத் திரையுலகம் குரல் கொடுக்கும்

நடிகர் சத்தியராஜ் நம்பிக்கை

(சென்னை)

ஈழத் தமிழர்களுக்காக, தமிழகத் திரையுலகம் ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. முதல்வர் கலைஞர் கருணாநிதியின் காலத்திலேயே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இவ்வாறு நடிகர் சத்தியராஜ் கூறியுள்ளார்.

ஊடகமொன்றிற்கு அவர் அளித்த செவ்வியின் விபரம் வருமாறு,

கேள்வி: இலங்கைக்கு இந்தியா இராணுவ ரீதியில் உதவக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் அவ்வாறு எத்தகைய இராணுவ உதவியும் வழங்கப்படவில்லை என்று தமிழகக் காங்கிரஸ் பிரமுகர்கள் கூறுகிறார்களே?

பதில்: தொடர்ந்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் அடிப்படையில்தான் நாமும் பேச முடியும். இலங்கைக்கு இந்திய அரசாங்கம் இராணுவரீதியில் எந்த உதவிகளையும் செய்யக்கூடாது என்பதுதான் என் கருத்து. அதைவிட ஒவ்வொரு தமிழனும் இப்படித்தான் நினைக்கிறான். அதே வேளையில் சிலர் சொல்வது போல உண்மையாகவே ஆயுதங்கள் கொடுக்கப்படவில்லை என்றால் அதை வரவேற்போம். கொடுத்திருந்தால் கண்டிப்போம். மேலும் இராணுவ உதவிகளை மட்டுமே குறிப்பிட்டுக்கண்டிக்கவில்லை. இலங்கையில் பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கு மருந்து மாத்திரைகள் போய்ச்சேர வேண்டும். அங்கு பசியால் வாடிக்கொண்டிருக்கும் சகோதரர்களுக்கு உணவு போய்ச்சேரவேண்டும். விடயங்கள் எல்லாம் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக செய்யப்பட வேண்டும் என்பது தான் என் கோரிக்கை.

கேள்வி: தமிழக முதல்வர் கலைஞர் ஈழப்பிரச்சினையில் அவ்வளவு தீவிரம் காட்டுவதாகத் தெரியவில்லையே? பழ. நெடுமாறனின் உண்ணாவிரதத்தை முடிக்க கோரிக்கை விடுத்தவர், அதன் பிறகு அவரை அழைத்துப் பேசவில்லையே?

பதில்: கலைஞருக்கு இலங்கைப் பிரச்சினையில் உண்மையாகவே ஆர்வம் இருக்கிறது. ஈழத்தமிழர்கள்மீது உண்மையாகவே அக்கறை இருக்கிறது. அதனால் தான் தமிழ்ச் செல்வன் இறந்தபோது கூட சக தமிழன் உயிரிழந்ததன் அடிப்படையில் கண்ணீர் கவிதை எழுதினார். அவரது தமிழுணர்வை யாரும் சந்தேகப்பட முடியாது. அதனால் தான் ஒரு பொதுநிகழ்ச்சியில் மேடையில் வைத்தே அவரைப் பாராட்டினேன். கலைஞர் கவிதை எழுதாமல் வேறு யாருங்க இன்னொரு தமிழனுக்காக இப்படி யொரு கவிதை எழுத முடியும்?

கலைஞர் ஆட்சியில்இருக்கும் போதே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும். இதைத் தான் நானும் கலைஞரிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கலைஞரால்மட்டுமே இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பது உலகத் தமிழர்கள் அனைவருக்குமே தெரியும்.

கேள்வி: ஒகேனக்கல் நீர்ப்பிரச்சினைக்காக குரல் கொடுத்த தமிழ்த் திரையுலகம் ஈழப் பிரச்சினையில் பாராமுகமாக இருப்பது சரியா? ஏன் இதற்காகவும் உண்ணாவிரதம் இருந்திருக்கக்கூடாது?

பதில்: திரையுலகத்தினர் பொதுவான விடயங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் குரல் கொடுக்க வேண்டும் என்பதில் எனக்கும் உடன்பாடு உண்டு. அதனால் தான் நான் என் மனதுக்குச் சரியெனப்பட்டதைப் பேசிவருகிறேன். தனிமனிதனாக நான் ஒருவன் எழுப்பும் குரல் பலமாக ஒலிக்காது. ஆனால் இப்படிப்பட்ட தனிமனிதக் குரல்கள் அதிகரித்து ஒட்டுமொத்தமாக ஒலிக்கும் போது அதற்குரிய பலன் கிட்டும். பல இலட்சம் குரல்கள் ஒருநாள் கோடிக் கணக்கில் அதிகரித்து ஒலிக்கும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கேள்வி: பிரபாகரன் என்ற படத்தை எடுத்தமைக்காக இலங்கை இயக்குநரை தமிழகத்தில் தாக்கியிருப்பதாக செய்திகள் வெளியாகின. இத்தகைய வன்முறையைக் கையாள்வது சரிதானா?

பதில்: நீங்கள் குறிப்பிடும் அந்த இயக்குநர் மீது தாக்குதல் நடந்ததா என்பது தெரியவில்லை. காவல்துறையும் கூட அவ்வாறு தாக்குதல் நடக்கவில்லை என்று சொல்லியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் தமிழனாகப் பிறந்தவர்கள், தமிழன் எனும் உணர்வு கொண்டவர்கள். அப்படத்தை பார்க்கக் கூடாது அப்படத்தை வெளியிடக் கூடாது என்று தற்காலிகமாக நீதிமன்றத்தில் தடைபெற்றுள்ளனர்.

ஆனால் இந்தியா கருத்துச் சுதந்திரம் உள்ள நாடு. எதிர்காலத்தில் அப்படத்துக்கான தடை நீக்கப்படலாம். அவ்வாறு நீக்கப்பட்டாலும் கூட உண்மையான பச்சைத் தமிழன் அந்தப் படத்தை பார்க்காமல் புறக்கணிக்க வேண்டும். (ந-5)

சீனா-பாகிஸ்தான் -ஈரானுடன் கூட்டு

இலங்கைக்கு தண்டனை வழங்க சர்வதேச சமூகம் தயாராகிறது

விடுதலைப்புலிகள் ஏடு தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கொலை நடவடிக்கைகளுக்காகச் சிங்கள அரசு மீது 'கண்டனம் செய்தல்' மற்றும் 'எச்சரிக்கைகளை விடுத்தல்' என்ற நிலையிலிருந்து அதன் மீது 'தண்டனைகள் வழங்கல்' என்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் உலக நாடுகள் படிப்படியாக இறங்க முற்படுகின்றன என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வஏடான 'விடுதலைப்புலிகள்' ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (14.04.08) வெளியான விடுதலைப்புலிகள் ஏட்டின் 140 ஆவது இதழில் இடம் பெற்றுள்ள முகப்புச் செய்தியில்,

தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கொலை நடவடிக்கைகளுக்காகச் சிங்கள அரசு மீது 'கண்டனம் செய்தல்' மற்றும் எச்சரிக்கைகளை விடுத்தல் என்ற நிலையிலிருந்து அதன்மீது தண்டனை கள் வழங்கல் என்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் உலக நாடுகள் படிப்படியாக இறங்க முற்படுகின்றன.நீண்ட பல ஆண்டுகளாகச் சிங்கள அரசிற்குப் பொருண்மிய- இராணுவ உதவிகளையும், அரசியல் ஆதரவுகளையும் வழங்கி வந்த மேலை நாடுகள் தற்போது சிங்கள அரசைக் கைவிட்டு ஒதுங்கும் அரசியல் போக்கைக் காணக்கூடியதாக உள்ளது.

உலக அரசுகள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் தொடர்ச்சியான கண்டனங்களைப் புறந்தள்ளிவிட்டு தமிழினக் கொலையைத் தீவிரப்படுத்தியுள்ள சிங்கள அரசை ஒரு 'பயங்கரவாத அரசாக' முத்திரை குத்தும் ஆரம்ப முயற்சிகளில் அனைத்துலக சமூகம் இறங்கியுள்ளது;

எதிர்வரும் யூன்மாதத்தில் சிங்கள அரசுக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் எடுக்க முயற்சிக்கும் ஒரு நடவடிக்கை, சிங்கள அரசு மீதான ஒரு பொருண் மியத்தடை போன்றே காணப்படுகின்றது.

சிங்கள அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் இருபதினாயிரம் கோடி ரூபா வரு மானம், ஒரு இலட்சம் சிங்களவருக்கு வேலை வாய்ப்பையும் கொடுக்கும் ஆடை ஏற்றுமதிக்கான சலுகைகள் மற்றும் கோரல்களை நிறுத்தப் போவதாக ஐரோப் பிய யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் காட்டப்படாவிட்டால் மேற்குறித்த 'பொருண்மியத்தடை' நடவடிக்கைக்கு சிங்கள அரசு உள்ளாகும் என்று ஐரோப்பிய யூனியன் நிபந்தனை விதித்துள்ளது. ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து, கனடா போன்ற நாடுகள் சிங்கள அரசுக்கான பொருண்மிய உதவிகளை பெருமளவு கட்டுப்படுத்தியுள்ளன. அமெரிக்கா – பிரித் தானியா போன்ற நாடுகள் சிங்கள அரசுக்கான போராயுத வழங்கல்களை, நிறுத்தியுள்ளன. ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் உலகநாடுகளின் முதன்மையிடம் வகிக்கும் யப்பான் தனது உதவிகளை மட்டுப்படுத்தியுள்ளது. சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களை-இனக் கொலையை அம்பலப்படுத்தி அண்மை யில் அமெரிக்க அரசு ஒரு அறிக்கை வெளி யிட்டிருந்தது. அமெரிக்காவின் இந்த அறிக்கை சிங்கள பேரினவாதிகளை சீற்றத்திற்குள்ளாக் கியுள்ளது. ஸ்ரீலங்காவிற்கான அமெரிக்கத் தூது வரை தனது அலுவலகத்திற்கு அழைத்த இலங்கை வெளி விவகார அமைச்சர் அமெரிக்க அறிக்கையின் விபரங்கள் பொய்யானவை என்று வலியுறுத்தினர். அந்த அறிக்கையை அமெரிக்க அரசு விலக்கிக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கத்தூதுவரை கேட்டுக் கொண்டார். சந்திப்பை முடித்துக் கொண்டு தூதரகம் திரும்பிய அமெரிக்கத்தூதுவர் பத்திரிகையா ளர்களை அழைத்தார். சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து அமெரிக்க அரசு வெளியிட்ட அறிக்கை சரியானது என்று வலியுறுத்தி சிங்கள அரசின் முகத்தில் கரிபூசியிருந் தார். உலகின் அனைத்து மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களுடன் மோதல் போக்கை சிங்கள அரசு தொடர்ந்த படி உள்ளது. இப்போது அனைத்துலக செஞ் சிலுவைச் சங்கத்துடனும் மோதலைத் தொடுத்துள்ளது.

ஐ.நா. சபையின் மனித உரிமைக் கடிதத்தில் ஒரு உறுப்புரிமை நாடாக ஸ்ரீலங்கா இருந்து வருகின்றது. இப்போது அந்த உறுப்புரிமையை இழக்கும் நிலையில் சிங்களம் உள்ளது. வரும் மே மாதத்தில் நடக்கவிருக்கும் ஐ. நா சபையின் மனித உரிமைக்கழகத்துக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா தோல்வியடையப்போகின்றது என்று கொழும்பு வார ஏடு ஒன்று அபாய அறிவிப்பு செய்கின்றது. இவ்விதமாக உலகின் மதிப்பு வாய்ந்த ஜனநாயக நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள் ஸ்ரீலங்கா அரசை தீண்டத்தகாத ஒரு அரசாக ஒதுக்கி வைக்க முற்படும் வேளையில், மேற்குறித்த நாடுகளுடன் முரண்பாடுகளைக் கொண்டுள்ள சீனா -பாகிஸ்தான்- ஈரான் போன்ற நாடுகளை சிங்கள அரசு தமது இராணுவக் கூட்டாளிகளாக மாற்றி வருகின்றது. மேலை நாடுகள் விரும்புவது போல மனித உரிமைகளை மதிக்க சிங்கள அரசு தயாரில்லை என்ற நிலைப்பாட்டையே கூட்டாளிகளை மாற்றுவதன் மூலம் அது வலியுறுத்த விரும்புகின்றது.

தமிழின அழிப்புப் போரைத் தொடரும் நோக்கில் மேலை நாடுகளுக்கு எதிராக சிங்கள அரசு மேற்கொள்ளும் இந்த வெட்டி ஓட்டம் மூலம் சிங்கள அரசு பயன் பெறப்போவதில்லை என்பதை வரும் காலம் நிரூபிக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

கல்வித்துறையில் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் அனுமதி பெறவேண்டும்

கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் கல்வித்துறையில் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் குறிப்பிட்ட ஒரு மாகாணத்திற்கு உட்பட்டதாயின், அம்மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர்களிடம் இருந்தும் தேசிய மட்டத்திலான வேலைத் திட்டமாயின் மத்திய கல்வியமைச்சிடம் இருந்தும் அனுமதி பெற வேண்டும் என கல்வியமைச்சின் செயலாளர் நிமால் பண்டார தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளினால் நாட்டின் பாதுகாப்பு இறையாண்மை மற்றும் தேசிய நலன் என்பனவற்றுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

உள்நாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நிமால் பண்டார தெரிவித்துள்ளார். (அ-7)

சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?

தொடக்கம்

இதுவரை உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்திலும் குடும்ப ஸ்தானத்திலும் சஞ்சாரம் செய்து வந்த ராகு -கேது பகவான்கள் வரும் 30.04.08 அன்று உங்கள் ராசிக்கும் சப்தம ஸ்தானத்திற்கும் செல்ல இருக்கிறார்கள். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு குரு பகவான் சப்தம ராசிக்குப் பெயர்ச்சி ஆகி, ராகு பகவானுடன் இணைந்து கேது பகவானைப் பார்வையிடுகிறார். இந்த ராகு-கேது பகவான்களின் பெயர்ச்சிக் கால கட்டம் முழுவதும் சனி பகவான் உங்களின் தனம், வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ஏழரை சனியின் இறுதிக் காலமாக சஞ்சாரம் செய்கிறார்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவான் உங்களின் நண்பர்களால் சிறு குழப்பங்களை உண்டாக்குவார். எனினும் குரு பகவானின் அருளால் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று என்பதுபோல் கடைசி நேரத்தில் அவற்றிலிருந்து தப்பித்துவிடுவீர்கள். மேலும் அவர் உங்களை சில புது அனுபவங்களுக்கு உட்படுத்தி உங்களின் மனோபலத்தைக் கூட்டிக்கொடுப்பார்.

உங்களால் ஆன உதவிகளை ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் அளிப்பீர்கள். விட்டுக்கொடுத்து உங்களின் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் ஆற்றல் உண்டாகும். தத்துவ மார்க்கத்தை உங்கள் மனம் நாடும். கேது பகவான் அருளால் உங்கள் எண்ணத்தில் மன முதிர்ச்சியும் பக்குவமும் உண்டாகும். இல்லறத்தில் பற்றுதல் உண்டானாலும் மற்றவர்களின் நலத்தையும் தன்னலமாகவே கருதுவீர்கள்.

மொழிகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் கூடுமாகையால் புதிய மொழிகளை ஆர்வத்துடன் கற்றுக்கொள்வீர்கள். உங்களின் செயல்களின் வேகம் கூடும் இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு குரு பகவானின் சேர்க்கை ராகு-கேது பகவான்களுக்கு உண்டாவதால் வாழ்க்கையில் அதிர்ஷ்டங்களைக் காண்பீர்கள். சனி பகவான் குடும்ப ஸ்தானத்தில் குரு பகவானின் பார்வை பெற்று இந்த ஆண்டு இறுதி வரை அமர்ந்துள்ளதால் உங்களின் செல்வ வளம் கூடும். மன அமைதி உண்டாகும்.

உங்களின் பேச்சில் கடமை உணர்ச்சி மிகுந்து காணப்படும் நீங்கள் நியாயாதிபதி என்று பெயரெடுப்பீர்கள். அதே சமயம் இந்த ஆண்டு இறுதி வரையில் குரு பகவான் சற்றுப் பாதகமாக சஞ்சரிப்பதால் உங்களுக்கு சிறிது சோம்பேறித்தனம் கூடும். தற்பெருமை பேசுவீர்கள். தெய்வ ஈடுபாடு குறையும். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு இந்நிலைமை மாறி உங்களின் வேதாந்த அறிவு கூடும் உங்களின் சகிப்புத்தன்மை மற்றும் பொறுமை உயரும். உங்களை நீங்களே அறிந்து சமுதாயத்திற்குப் பயன்படுவீர்கள் என்றால் மிகையாகாது.

உத்யோகஸ்தர்கள் அலுவலகத்தில் நிலவும் இறுக்கமான சூழ்நிலைகளில் சிக்கி மன அழுத்தத்திற்கு ஆளாவார்கள். சிலர் விரும்பத்தகாத இடமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். அதே சமயம் உங்களின் திறமைகள் பளிச்சிடும். உங்களுக்கு வரவேண்டிய தொகைகள் வரும் எனினும் பயணங்களால் பலன் எதையும் எதிர்பார்க்க இயலாது.

வியாபாரிகள் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் அனுகூலமான பலன்களைக் காண்பர். அதேநேரம் கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும் புதிய 'சந்தைகளை நாடிச் செல்லும் போது மிக்க கவனத்துடன் செயல்படவும் கூட்டுத் தொழில் புரிவோர் நண்பர்களிடம் உஷாரக இருக்கவும் சிலர் வம்பு வழக்குகளைச் சந்திக்க நேரிடும்.

விவசாயிகளுக்கு மகசூல் நன்றாக இருக்கும் பாசன வசதிகளுக்காகவும் உரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களுக்காகவும் செலவு செய்வீர்கள். கால்நடைகளை வைத்திருப்போர் பராமரிப்புச் செலவுகளை செய்ய வேண்டிவரும் குத்தகைப் பாக்கிகளை அடைப்பீர்கள்.

அரசியல்வாதிகள் பொதுச் சேவையில் அனுகூலமான திருப்பங்கள் காண்பர். உங்களுக்கு எதிராகப் போடப்பட்ட வழக்குகள் சாதகமாகும். தொண்டர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வீர்கள். எதிர்கட்சியினருக்கு சாதுரியமாகப் பதிலளிப்பீர்கள். எனினும் பேச்சில் கண்ணியம் குறையாமல் பார்த்துக் கொள்ளவும்.

கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். அதேசமயம் எதிர்பார்த்த பெயர், புகழ் கிடைக்கத் தாமதமாகும் .மனம் தளராமல் பொறுமையுடன் உங்கள் வேலைகளைச் செய்து வரவும். அது சிலருக்கு விருதுகளையும் பண முடிப்புகளையும் பெற்றுத் தரும். உங்களின் உற்ற நண்பருக்கு தக்க நேரத்தில் உதவி செய்து மகிழ்வீர்கள்.

பெண்மணிகள் குடும்பத்தில் அனுகூலமான நிலைமைகளைக் காண்பார்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உற்றார். உறவினர்கள் இணக்கமாக இருப்பார்கள்.

மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப் பெண்களைப் பெறுவார்கள். பெற்றோர்களின் ஆதரவால் உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். அதே சமயம் சக மாணவர்களுடன் வீண் விவாதங்கள் வேண்டாம்.

(தொடரும்)

வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

சீந்தில் கொடி

Botanical Name-Tinospora Cordifolia
Family - Menispermaceae

விஞ்ஞானம் ஒரு எல்லைவரை மட்டுமே பதில் சொல்கிறது. அது விட்ட இடத்தைப் பற்றிக் கொள்கிறது மெய்ஞானம். சித்த மருத்துவமோ விஞ்ஞானத்தில் தொடங்கி மெய்ஞானத்தில் முடிகிறது. மருத்துவத்தையே இலக்கியமாகவும், தத்துவமாகவும், வாழ்க்கைமுறையாகவும் மாற்றிக் கொண்ட ஒரு துறை சித்தமருத்துவம் மட்டும்தான். அது ஒரு பல்கலைச் சுரங்கம். அதில் புகுந்தால் மருத்துவம், சோதிடம், யோகம், ஞானம் என்று விதவிதமான புதையல்களை எடுக்கலாம்.

சித்தர்கள் வாழ்க்கை உண்மைகளையும் மருத்துவ மகிமைகளையும் மறைவு மொழியில் எழுதி விட்டுச் சென்றார்கள். தேடுங்கள் கண்டடைவீர் என்று எழுதியும் வைத்தார்கள். நாம் தேட வேண்டும், தேடிக் கண்டடைய வேண்டும் என்பதற்காக.

மண்ணின் வழிதான் மூலிகைகளின் மூலம் நம்மை வந்து அடைய வேண்டும் நமக்கு ஏற்படுகின்ற நோயை தீர்க்கும் மருந்து இந்த மண் ணில் இருந்துதான் கிடைக்க வேண்டும்.அந்த இயற்கைப் பொருளைத் தான் நம் உடலும் ஏற்றுக்கொள்ளும். நமக்கும் ஒத்துக்கொள்கின்றது.

சங்ககாலத் தமிழர்கள் தம் வாழ்வின் ஒரு அங்கமாகவே மூலிகைகளைக் கண்டார்கள். நிலங்களை ஐந்துவகையாகப் பிரித்த தமிழர்கள் அவற்றிற்கு தாவரங்களின் பெயரையே இட்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய பூக்களின் பெயர்களைக் கொண்டு நிலங்களை அழைத்தனர். அந்த அளவுக்கு அவர்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாக இருந்தது.

ஆனால் இன்று உணவுப் பழக்கவழக்கம், வாழ்க்கை முறை (Diet pattern and life style) முற்றிலும் மாறுபட்ட, இயந்திர வாழ்க்கையை மனிதன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். ஆகவே சராசரி ஆயுட் காலம்குறைந்து கொண்டே போகிறது. அப்படி அதுவரை மனிதன் வாழ்ந்தாலும் நோய்களுடன் போராடிக் கொண்டே வாழ்கின்றான். இதில்முக்கியமாக நீரிழிவு அல்லது மதுமேகம் (Diabetes mellitus) அதிஉயர் குருதியமுக்கம் (hypertension) பருத்த உடல் (obesity)ஆகிய நோய் நிலைமைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

நீரிழிவு நோய் நாளடைவில் நோயாளியை போஷாக்கின்மை நிலைக்கு (Mulnutritional) இட்டுச் செல்லும். இந்த நிலையில் மேற்கூறிய சீந்தில் கொடியின் சத்து அல்லது மா நீரிழிவையும் கட்டுப்படுத்துவதுடன், உடலின் நோயெதிர்ப்பு சக்தியையும் கூட்டக்கூடிய தன்மையையும் இருப்பதால் அந்நோயால் ஏற்படும் உபத்திரவங்களையும் தவிர்க்கக் கூடியதாகவிருக்கும்.

இப் பருத்த ஏறுகொடியானது (climber) யாழ் மாவட்டத்தில் கைதடி, திருநெல்வேலி, மீசாலை, மானிப்பாய், வேலனை போன்ற பல பிரதேசங்களில் பரவலான பரம்பலாக அவதானிக்கப்பட்டது. பெரிய மரங்களின் மேல் இக்கொடி படர்ந்திருக்கும். வேப்பமரத்தின்மேல் படர்ந்திருப்பது சிறப்பாகக் கருதப்படுவது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். சீந்திலானது வேதகாலத்தில் அறியப்பட்ட பழம் பெரும் மூலிகை.

சீந்திலின் முற்றிய கொடிகளின் இலைக் கணுக்களில் இருந்து, தாழையில் இருப்பது போல் நூல் போன்ற மெல்லிய விழுதுகள் (Aerial roots) இறங்கும். பட்டை,சாம்பல் கலந்த மண்ணிறம். இலைகள், மெல்லிய வாள் (cordate) வடிவமுடையவை. பூக்கள் சிறியவை. மஞ்சள் நிறமுடையவை. இவை துண்டங்கள் மூலம் (cutting) இனவிருத்திய டையக் கூடியவை.

பயன்படும் பகுதிகள்: இலைகள்(Leaves)
முற்றிய தண்டு (Matured stem)
வேர் (Root)

மருத்துவச்செய்கை: உடற் தேற்றி(Alterative)
நீரிழிவு நீக்கி (Anti diabetic)
வெப்பமகற்றி (Febrifuge)

மருந்துச் சத்துக்கள்: -Bitter glucoside Giloinin , Columbin, Chasmathin, Tinosporic acid, Berberine,

மருத்துவப்பயன்கள்

1. இலையை அனலில் வாட்டிப் புண்களின் மீது போட்டுவர புண்கள் ஆறும்.

2. இலையை வாட்டி தாங்கக்கூடிய சூட்டில் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி நிலைமைகளில் மார்பில் ஒற்றடமிடலாம்.

சீந்தில் மா தயாரிக்கும் முறை

நன்றாக முற்றிய சீந்தில் கொடியை (தண்டினை) சிறு துண்டுகளாக நறுக்கிப் பொடித்து, குளிர்ந்த நீர்விட்டு மறுநாள் கடைந்து திப்பியை கசக்கிப் பிழிந்து எடுத்து நீர்விட்டு வெயிலில் இரண்டு அல்லது மூன்று மணிநேரம்வைக்க நீர் தெளியும். அந்த நீரை இறுத்து விட்டு, வேறு நீர்விட்டு கலக்கி மேற்கண்டபடியே நீரை இறுத்துச் சுண்டவிட்டு, மறுபடியும் நீரை இறுத்தெடுத்த பின், அடியிற் படிந்திருக்கும் மாவே சீந்திற் சர்க்கரை சீந்தில் மா எனப்படும்.

இதை உலர்த்தி வாயிலிட கைப்பாக இருக்கும். இம் மா நீரிழிவைத் தவிர, சுரங்களுக்கும், பின்பு ஏற்படும் உடல் இளைப்பிற்கும், இருமல், வாந்தி போன்ற நிலைமைகளிலும் பயன் படுத்தலாம். நீரிழிவு நோயாளிகள் அருகில் இருக்கும் சித்த வைத்தியர்களின் ஆலோசனையைப் பெற்று மேற்படி மூலிகை மருந்தைப் பயன் படுத்த லாம்.

இதற்குரிய செய்கைகள் யாவும் குன்றாது இருக்க வேண்டுமாயின். இக்கொடியில் கைப்பக மிக வேண்டும். இக்குணமேற்படுவதற்கு கொடி முதிர வேண்டும். முதிர்ந்த கொடியை கோடை காலத்தில் சேகரிக்க வேண்டும். மற்றக் காலங்களில் சேகரிக்கப்படுவதற்கு இக்குணம் நிறைந்திராது. முற்றிய கொடியாயிருந்தால் சத்து வெண்மையாகவிருக்கும். முற்றாதிருப்பின் சத்து அழுக்கு வெண்ணிறமாயிருக்கும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்,கைதடி

நீரிழிவு நோயாளிகளுக்கிருக்கும் காலில் மதமதப்பு பாதத்தில் ஏதோ பூசியது போன்ற உணர்வு, மதுமேக கரஸ்தம்பவாதம் (diabetic neuropathy) போன்ற நிலைமைக்கும் சீந்தில் மா சிறந்த மூலிகை மருந்தாகும்.

போலீச்சான்றிதழ்களுடன் வைத்தியர்கள் தேடுதல் நடவடிக்கையில் பொலிஸார்

(கொழும்பு)

போலி வைத்தியர்களைக் கண்டு பிடிக்கும் பொருட்டு நாடு தழுவிய ரீதியில் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரெட்ண தெரிவித்துள்ளார். இந்த முறை கேடான வைத்தியர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இவ்வாறான போலி வைத்தியர்கள் தொடர்பான தகவல்களை பொதுமக்களை வழங்குமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் கேட்டுள்ளார்.

போலிச் சான்றிதழ்களை வைத்துக் கொண்டு பலர் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு வருவதால் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மையில் பொலிஸ் மா அதிபரைக் கேட்டுக் கொண்டது. இதற்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போலி வைத்தியர்கள் தொடர்பாக மக்கள் வழங்கும் தகவல்களை முறையாக பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-7)

ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் அஷ்ரஹார கொடுப்பனவு

(கொழும்பு)

அஷ்ரஹார காப்புறுதித்திட்டத்தில் ஓய்வு பெற்ற ஊழியர்களை இணைத்துக்கொள்வது தொடர்பாக தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல ஓய்வூதியர்கள் சங்கத்துடன் கடந்த வாரம் இது தொடர்பாக கலந்துரையாடியதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கே. ஏ.திலகரட்ண தெரிவித்துள்ளார்.

அஷ்ரஹார காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சில அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள். அரசாங்க ஊழியர்கள் பெற்றுவரும் இந்தக் காப்புறுதிக் கொடுப்பனவை ஓய்வுபெற்றவர்கள் பெற்றுக்கொள்ளாததால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

ஓய்வூதியர்கள் முன் வைக் கும் பிரச்சினைகள் குறித்து எதிர்காலத்தில் தொடர்ந்தும் கலந்துரையாடப்படும் என திலக்ரட்ண தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அஷ்ர ஹார கொடுப்பனவை ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் பெற்றுக்கொடுக்க கவனம் செலுத்தப்படும்.

(அ-7)

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தத்தினாலல்ல அதிகார பகிர்வின் மூலமே தீர்வு காணலாம்

என்கிறார் எஸ்.பி. திஸாநாயக்க

(கொழும்பு)

யுத்தத்தினால் எந்த விதமான பயனும் ஒருபோதும் ஏற்படப் போவதில்லை. யுத்தத்தினால் இனப்பிரச்சினைக்கு முடிவுவராது. அதிகாரப் பரவலாக்களின் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ். பி.திஸா நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பசறை தொகுதி பிரதான அமைப்பாளரும் , ஊவா மாகாண சபை உறுப்பினருமான க. வேலாயுதம் தலைமையில் பசறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்றஉறுப்பினர்கள் , மாகாண சபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் இக்கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு திஸாநாயக்கா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

வடக்குகிழக்கில் மஹிந்த முன்னெடுக்கும் யுத்தத்தினால் எவ்வித பயனும் ஒரு காலமும் எட்டப்போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிக்காமல் தமிழர்களை தடுத்தமைக்கான பிரதான காரணம் மஹிந்த அரசு முன்னெடுக்கும் கொடூர வன் முறைகளை சர்வதேசத்திற்கு எடுத்தியம்பி தனக்கொரு சாதகமான சூழ்நிலையினை ஏற் படுத்திக்கொள்ளவேயாகும்.இதனை அறி யாத அரசும் , அரசைச்சார்ந்த கட்சிகளும் முட்டாள் தனமாக செயற்படுகின்றன. இதற்காகவே மக்கள் விடுதலை முன்னணியினரும் ஹெல உறுமயவும் பாதையமைத்து கொண்டு இருக்கின்றனர். யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசிற்கு எவ்வித விருப்பமும் இல்லை. மக்களை கொன்று குவித்து அதனை ரசிப்பதே இவர்களின் வியூகம். நான் உறுதியாகக்கூறுகின்றேன் யுத்தத்தினால் இப்பிரச்சினை முடிவுக்கு வராது. அதிகார பரவலாக்கலின் மூலமே தீர்வு காண முடியும். இதற்கு உலக நாடுகள் பல உதாரணங்களாக இருக்கின்றன. எப்படித்தான் இந்த அரசிற்கு இதனை தெளிவு படுத்த முயற்சித்தாலும் அது செவிடன் காதில் ஊதுகின்ற சங்கு போல் ஆகி விடுகின்றது.

எனவே யுத்தத்தினால் இலங்கை நாடு மேன்மையடையவும் சாந்தி யடையவும் முடியாது. அதிகாரப்பரவலாக் கலின் மூலமே இதனை சாதிக்க முடியும்.

ஆகவே மூடத்தனமான ஆயுதங்களை ஏந்தி இராணுவ வீரர்களையும் பொதுமக்களையும் அரசியல் தலை வர்களையும் கொன்று குவிப்பதனை நிறுத்தி இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசையில் கூடி ஒரு மனப்பட்டு கலந்தா லோசித்து நிரந்தர சமாதானத்திற்கும் மக்களின் நிம்மதிக்கும் வழி செய்யவேண்டும். இந்த அரசை எதிர்த்து இன்று நாம் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டு இருக்கின்றோம். சட்டிபானை களைப் போட்டு உடைக்கின்றோம். ஏன்? இதனைப் பார்த்தா வது மக்களின் பசியினை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவேயாகும்.

அதேபோல் எதிர்வரும் மாதங்களில் மக்களை ஓரணி திரட்டி பாரிய மக்கள் போராட்டத்தினை நடாத்தி இந்த அரசினை ஆட்சியில் இருந்து விரட்ட எண்ணியுள்ளோம். இதனை சாதிக்க மக்கள் சக்தி எம்முடன் உள்ளது. எனவே இவர்கள் உடனடியாக ஓடிவிடவேண்டும். இல்லாவிட்டால் பல விபரீதங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். (ஓ-5)

க.பொ.த (சா/த) பரீட்சைபெறுபேறு-2007

தேசிய ரீதியில் யாழ். கல்வி வலயம்

2007இல் நடைபெற்ற க.பொ.த (சா) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் யாழ்ப்பாணக்கல்விவலயத்தின் பெறுபேற்றை வலம்புரியின் கட்டுரையாசிரியர் ஏ.வி ஜோர்ச் பகுப்பாய்வு செய்துள்ளார். ஏனைய கல்வி வலயங்களும் தமது பெறு பேற்றினை பகுப்பாய்வு செய்யுமிடத்து அவை இங்கு பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

காய்ந்துபோன செம்மண் தரையை கொத்தி புரட்டுகின்ற போது நெற்றியிலே வியர்வைத் துளிகள் வழிந்து ஓடுகையில் நெஞ்சிலே தன் பிள்ளையை சீமைக்கு அனுப்பி படிப்பிக்க வேண்டும் என்ற சிந்தனையை மனதிலே சுமந்தபடி பாடுபடும் சமூகமொன்றின் மத்தியில், 2007 ஆம் ஆண்டுக்கான யாழ் கல்வி வலய க.பொ. த. (சா/த) பெறுபேறுகள் என்றும் இல்லாதவாறு மிகச் சிறப்பாக குறிப்பாக குடாநாட்டின் ஏனைய வலயங்களை காட்டிலும் முன்னணியில் நிற்பதினை புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

க.பொ. த. உயர் தரத்தினை கற்பதற்கு அடிப்படைத் தகுதியான பிரதான 5 பாடங்களில் ஏறக்குறைய 3298 பிள்ளைகள் தோற்றி, பெற்ற பெறுபேறுகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. கட்டுரையாசிரியர் வசதி கருதி மேற்படி பாடங்களின் பெறுபேறுகளை

பாடங்கள்	Aபுள்ளி பெற்ற	Bபுள்ளி பெற்ற	பாடரீதியான சித்தி வீதம்
தமிழ் மொழியும் இலக்கியமும்	881 பேர்	454	82.11%
விஞ்ஞானமும் தொ.நுட்பம்	306	330	57.52
கணிதம்	652	285	60.55
சமூகக்கல்வியும் வரலாறும்	751	416	77.01
ஆங்கிலம்	431	205	44.88

மட்டும் கவனத்தில் எடுத்துள்ளார்.

பிரதான பாடங்களில் இம்முறை A புள்ளிகள் பெற்றோரின் தொகையும் அதே வேளை பாட ரீதியான சித்தி வீதமும் அதிகரித்தும், உயர்ந்தும் உள்ளதினை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. குறிப்பாக யாழ் .கல்வி வலயத்தில் கணித விஞ்ஞான பெறுபேறுகள் முன்னரைக் காட்டிலும் உயர்வடைந்துள்ளது. க.பொ.த. (சா/த) பெறுபேறுகளுக்கான பத்திரிகை விளம்பரங்களில், இது வரையும் முகம் தெரிந்திராத பல பாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகளின் சாதனைகள் வெளிவந்த வண்ணம் இருப்பதும் இம்முறை பெறுபேற்றின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. யாழ்.கல்வி வலய வரலாற்றின் பெரும் திருப்பு முனை இம்முறை க.பொ.த. உ/தரம் கற்பதற்கான மாணவர்களின் தகுதி பன் மடங்கு அதிகரித்திருப்பதுடன் க.பொ. த. சா/தரத்துடனான இடை விலகலும் பெருமளவு வீழ்ச்சியடையும்.

புள்ளி விபரங்கள் காட்டும் மேற்படி சிறப்பான நிலைமைகளைப் பல்வேறு கோணங்களில் பகுத்தாய்வு செய்ய முடியும். புள்ளிவிபரங்கள் சொல்லும் இந்த சாதனைக்கு பின்னால் இருந்த சக்திகள் எவை? இவ்வாறு இப்படியொரு பிரமிக்கத்தக்க பெறுபேறுகளை யாழ். வலயம் பெற்றுக்கொள்ள முடிந்தது என் பதிலேயே கட்டுரையாசிரியர் தனது கவனத்தினை செலுத்த முனைகின்றார்.

கட்டுரையாசிரியர் 2007ஆம் ஆண்டிற்கான க.பொ. த. சா/தரம் பெறுபேறுகளின் சிறப்பிற்கு இரண்டு வகையான காரணிகளை அடையாளம் காணுகின்றர்ர்.

1.நிலையான காரணிகள்

2.மாறும் காரணிகள்.

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பெற்றோர்களும் பிரபல்ய பாடசாலைகளும் (Popular Schools) நிலையான காரணிகளில் அடங்கும். ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் பெற்றார், பாடசாலை, ஆசிரியர் இம் மூன்று பேரும் பங்கெடுக்கின்றனர். யாழ். கல்வி வலயத்தினை சேர்ந்த பெற்றோர்கள் எந்தக் காலகட்டத்திலும் தமது பிள்ளைகளின் கல்வியில் எப்போதும் அதிக அக்கறை காட்டி வருவதினை மறுப்பதற்கில்லை. யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தாலென்ன சுனாமி தாக்கினால் என்ன அவர்கள் தம் பிள்ளைகளின் கல்வியில் எப்போதும் மிகுந்த அக்கறை கொண்டே இருந்து வருகின்றனர். யாழ். கல்வி வலயம் எப்போதுமே சிறப்பான பெறுபேற்றினை வழங்கிவரும் வலயம். இம்முறை அதி சிறப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இதற்கு பின்னால் பெற்றோர்களின் பங்களிப்பு எப்போதும் இருந்து வருவதினாலேயே இது ஒரு நிலையான காரணியாக கருதப்படுகின்றது.

பெற்றோர்க்கு அடுத்த படியாக பெறுபேறுகள் சிறப்பாக அமைவதற்கு இன்னுமொரு நிலையான காரணியாக இலங்கையிலேயே மிகச் சிறப்பான பிரபல்யமான (Popular Schools) பல பாடசாலைகள் யாழ்.கல்வி வலயத்தில் பல காலமாக இருந்து வருவதும் அத் தகைய பாடசலைகள் இன்று நேற்றல்ல எப்போதும் சிறந்த பெறுபேறுகளை வழங்கியும் வந்துள்ளன.

இம் முறை அத்தகைய பாடசாலைகள் அகில இலங்கையில் சாதனையை நிகழ்த்தியமையால் பெறுபேறு அதி விசேட கவனம் பெற்றவையாக மாறின. யாழ். கல்வி வலயத்தில் இத்தகைய பிரபல்யமான பாடசாலைகளின் தொகுதியானது பலமான பெறுபேறுகளிற்கான ஒரு அடிப்படை அம்சமாகும். இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் பிள்ளைகள் தேசிய ரீதியில், சர்வதேச ரீதியில் தம்மை தயார்ப்படுத்துபவர்களாகவும் சர்வதேச பிரஜை ஒன்றிற்கான போட்டி ரீதியான பண்புகளை வளர்த்துக்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர். அத்தகைய பிள்ளைகள் இத் தகைய சாதனைகளை யாழ் .கல்வி வலயத்திற்கு வழங்கி வருகின்றனர். 'பாடசாலைகளிலும் பெறுபேறுகள் தங்கியிருக்கின்றன' என் பதினை கட்டுரையாசிரியர் வலியுறுத்த விரும்புகின்றார்.

பொன்னபாட் நெப்போலியனை திரபல்கார் யுத்தத்தில் (Battle of Trefelgar) தோற்கடித்த நெல்சன் என்பவரிடம் பத்திரிகையாளர்கள் , இவ்வளவு பலம் கொண்ட நெப்போலியனை நீங்கள் எப்படி தோற்கடித்தீர்கள்? அதற்கான யுத்தி என்னவாக இருந்தது? எனக் கேள்வி எழுப்பிய போது , நெல்சன் பத்திரிகையாளர்களை நோக்கி அளித்த பதிலில் ஏறக்குறைய 450 வருடங்கள் பிரித்தானியாவின் பழமை வாய்ந்ததும் புகழ் பூத்ததுமான ஏடன் (Eden) பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டம் விளையாடியதனை ஒரு கணம் நினைத்துப் பார்த்தேன். அந்த அனுபவத்தின் வழியில் நெப்போலியனை தோற்கடிப்பதற்கான படத்தினை மனத் திரையில் விழுத்தினேன். அது எனக்கு வெற்றியினைத் தந்தது எனக் கூறினார்.

திரபல்கார் யுத்தத்தில் நெப்போலியனை தோற்கடிப்பதற்கான அனுபவத்தை மிகப் பிரபல்யமான ஏடன் பாடசாலையே அவருக்கு வழங்கியது.

இதிலிருந்து ஒரு உண்மை மிகப் பிரபல்யமான பாடசலைகள் வழங்கும் அனுபவம் சாதனையாளர்களை தோற்றுவிக்கும். அத் தகைய பல பாடசாலைகளைக் கொண்ட வலயமாக யாழ்.கல்வி வலயம் காணப்படுகின்றமையினால் அதிசிறப்பான பெறுபேறுகளுக்கு இப்பாடசாலைகளும் ஒரு காரணியாக அமைகின்றன.

மாறும் காரணிகள்

யாழ். கல்வி வலயத்தில் காலத்திற்கு காலம் இடம்பெறும் கல்வி சம்பந்தமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் பெறுபேறுகள் சிறப்பாக அமைவதற்கு காரணமாக அமைகின்றன. இக்காரணிகள் மாறும் காரணிகளாக செயற்படுவதினை கட்டுரையாசிரியர் அவதானிக்கின்றார். இவ் வகையில் யாழ். வலயக் கல்வி பெறுபேறுகள் 2007ஆம் ஆண்டு சிறப்பாக அமைந்ததற்கு முக்கிய காரணியாக- பின்னணியாக அமைந்தவொரு விடயம் 2007ஆம் ஆண்டில் பாடசாலை நாட்கள் முழுமையாக நிறைவேற்றப் பட்டமையாகும். இதனால் பிள்ளைகளும் ஆசிரியர்களும் பெரும் நன்மை அடைந்தனர். கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடும் இடத்து முழுப் பாடசாலை நாட்களும் பிள்ளைகளுக்கு கிடைத்தமை ஒரு சிறப்பான வரப்பிரசாதமாகும்.

இது ஏழைப்பிள்ளைகளின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளது. எனவே பாடசாலைகள் தடைகள் எதுவுமின்றி இயங்கியமையினால் பெறுபேறு அதிகரிப்பதற்கு உதவிய காரணியாக அமைந்தது எனலாம்.

மேற்படி விடயத்தினை பிறிதொரு கோணத்திலும் நோக்க முடியும். அதாவது இம்முறை மிகச் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் குறிப்பாக 10 பாடங்களிலும் 10 A அல்லது 9A புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் (அகில இலங்கையில் யாழ். கல்வி வலய மாணவர்களே அதிகளவான A புள்ளிகளை பெற்றுள்ளனர் என்பது மதிப்பீடாக உள்ளது) தாம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமைக்கான காரணங்கள் குறித்து பத்திரிகைகளில் கருத்து தெரிவித்த போது தமது பாடசாலைகளையும் தமக்கு கற்பித்த பாடசாலை ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

வரலாற்றில் முதல் தடவையாக சிறப்புப் பெறுபேறுகள் பெற்ற பிள்ளைகள் அதற்கான காரணமாக தமது பாடசாலையையும் தமது ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்துள்ளனரே அன்றி அவர்கள் ரியூட்டறிகளை குறிப்பிடவில்லை.

மேலும் சாதாரண பாடசாலைகளைச் சேர்ந்த அதிகளவான பிள்ளைகள் ஓரளவு சிறப்பான பெறுபேறு பெற்றிருப்பதினை கட்டுரையாசிரியர் பல பாடசாலைகளுக்கு சென்ற நேரடி தரிசனத்தின் போது அவதானித்து இருக்கின்றார்.இத்தகைய பிள்ளைகளில் பெரும் பாலானவர்கள் ஏழைப் பெற்றோரின் சிறார்கள். இவர்களுக்கு ரியூட்டறி செல்வதற்குப் பொருள் வசதி இல்லை. எனவே இத்தகைய பிள்ளைகளிள் பெறுபேறுகளுக்கு முழுக்க முழுக்க அவர்கள் கற்ற பாடசாலைகளும் ஆசிரியர்களுமே பொறுப்பாக இருந்துள்ளனர். எனவே முதற்தடவையாக சிறந்த பெறுபேறுகளுக்கு பாடசாலை, ஆசிரியர்கள், கல்வி வலய ஆளனியினர் காரணமாக இருந்துள்ளமை இப்பேறுபேற்றில் அவதானிக்கக் கூடிய இன்னொரு அம்சமாகும்.

2007ஆம் ஆண்டு க.பொ.த. சா/தரத்தின் யாழ். கல்வி வலய பெறுபேறு சிறப்பாக அமைந்தமைக்கு மாறும் காரணிகளில் இன்னொரு காரணியும் துணைபுரிந்திருப்பதனை கட்டுரையாசிரியர் அவதானித்துள்ளார். யுத்தம், விலைவாசியுயர்வு, வேலையின்மை, போசாக்குப் பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகளை யாழ்.குடாநாடு சந்தித்து வருகின்றது. இது ஏழை பெற்றோரினை கடுமையாக பாதித்துள்ளது. ஆனால் கடந்த வருடம் உலக உணவுத்திட்டத்தின் கீழ் யாழ். கல்வி வலயத்தில் பகல் உணவு அனைத்து பிள்ளைகளிற்கும் பாடசாலைகளில் சிறப்பாக வழங்கப்பட்டன. பல பாடசாலைகள் மிகத் தரமான -தமது வளங்களைப் பயன்படுத்தி இவற்றை வழங்கியமையை கட்டுரையாசிரியர் நேரடியாக அவதானித்துள்ளார். மேற்படி உணவு வழங்கல் திட்டம் பல பாடசாலைகளில் மாணவர்களை ஒழுங்காக பாடசலைக்கு வருகை தர துண்டியதுடன், பாடசாலையில் அவர்களின் உணவுத்தேவை நிறைவு செய்யப்பட்டு வந்தமையாலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தடையின்றி இடம்பெற்றன. இக்காரணங்களினாலும் இவ்வருடத்திற்கான பெறுபேறுகள் சிறப்பாக அமைந்தன.

ஒரு தேசிய மட்டத்திலான பரீட்சையொன்றின் போது பெறப்படும் சிறந்த பெறுபேறுகளுக்கு பல காரணிகள் துணை நிற்கின்றன. அந்த வகையில் 2007ஆம் ஆண்டிற்கான சிறந்த பெறுபேற்றிற்கு யாழ். கல்வி வலய ஆளனியினரும் அதற்கு பக்க துணையாக இருந்துள்ளனர்.

யாழ். கல்வி வலயத்தினால் நடை முறைப்படுத்தப்பட்ட பல்வேறு விதமான பிள்ளைகளை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பாடசாலைகளை உரிய விதத்தில் இயங்குவதற்குத் தூண்டின.

உதாரணமாக, பாடசாலை நேரங்களில் பரிசளிப்பு, விளையாட்டுப் போட்டிகள், பிற நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டு சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும் வகையில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதனால் பிள்ளைகளுக்கான நேரங்கள் வீண் விரயமாகாமல் பாதுகாக்கப்பட்டன.

மகத்தான சாதனை

A.C. ஜோர்ஜ்
யாழ்.கல்வி வலயம்
யாழ்ப்பாணம்

மேலும் பல செயலமர்வுகள் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டன. புதிய 5 E கற்றல் கற்பித்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை, சிறந்த வழிகாட்டல், தலைமைத்துவம் வலய மட்டத்தில் காணப்பட்டமை, ஓர் அணியாக செயற்பட்டமை போன்ற இன்னோரன்ன வலய மட்டத்திலான செயற்பாடுகளும் பெறுபேறுகள் சிறப்பாக இருந்ததிற்கான காரணங்களாக அமைகின்றன.

குண்டு மழை பொழிந்த போதிலும், நம்பி இருப்போர்க்கு யாழ். வலய கல்வித் திணைக்கள ஆளனியினரும் யாழ். வலய பாடசாலைகளும் ஆசிரியர்களும் இணைந்து பிள்ளைகள் சிறந்தபெறுபேற்று மழையொன்றினை பொழிய வைத்து நாட்டின் உயர் கவனத்தினை யாழ். வலயத்தின் மீது திருப்பிய யாழ். கல்வி வலய பெற்றார்களுக்கும் பிள்ளைகளுக்கும் எமது திணைக்களத்தின் சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

102-வது 'வடக்கின் பெரும் போர்'

உத்தியோக பூர்வ ஊடக அனுசரணை

வலம்புரி

நாளை ஆரம்பம்

'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு மிடையிலான 102-வது துடுப் பாட்டப்போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்ப மாகிறது.

இப்போட்டி மூன்று தினங் கள் கொண்ட இன்னிங்ஸ் துடுப்பாட்டமாகும். இப் பெரும் போருக்கு யாழ்.மத்திய கல்லூரி அணிக்கு பாஸ்கரன் டயானும், சென்.ஜோன்ஸ் கல் லூரி அணிக்கு மாசிலாமணி கரிப்பிரவீனும் தலைமை வகிக்கின்றனர்.

இரு கல்லூரிகளுக்கிடையி லான வடக்கின் பெரும்போர் 1904ஆம் ஆண்டு ஆரம்பமாகி யுள்ளபோதிலும் இப்பொழுது நடைபெறுவது 102-வது போட்டியாகும்.

போர்க்கால சூழ்நிலையால் சில ஆண்டுகள் இப்போட்டி நடைபெறவில்லை.

நாளை ஆரம்பமாகும் 102-வது வடக்கின் பெரும்போர் விறுவிறுப்பானதாக அமை யும் என கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க் கின்றார்கள்.

இவ்வகையில் பழமை வாய்ந் ததும் யாழ்ப்பாணத்தில் ஆரம் பமான முதலாவது துடுப்பாட்ட சமராகவும் வடக்கின் பெரும் போர் கணிக்கப்படுகின்றது.

அத்துடன் வடக்கில் கல்லூ ரிகளுக்கிடையில் நடைபெறும் துடுப்பாட்டப்போட்டிகளில் மூன்று நாட்களைக் கொண்ட ஒரே ஒரு போட்டி இதுவென் பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். மத்திய கல்லூரிதான் முதன் முதலாக யாழ்ப்பாணத் தில் பாடசாலை மட்டத்தில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. பின்னர் சென்.ஜோன்ஸ் கல்லூ ரியும் இணைந்து இவ்விரு கல் லூரிகளின் நட்புறவுப் பால மாக இத்துடுப்பாட்ட போட்டி களை 102 ஆண்டுகளாக ஒற்று மையாக கல்லூரிச் சமூகங்கள் நடாத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியை சிறப்புற நடத் துவதற்கு சகல பாகங்களிலி ருந்தும் வெளிநாடுகளிலிருந் தும் வந்து இரு கல்லூரிகளின் பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்குவது வழமையாக நடை பெறும் ஒரு நிகழ்வாகும்.

இதேவேளை இந்த வருடம் நடைபெற்ற பாடசாலைகளுக் கிடையிலான துடுப்பாட்டத் தொடரில், யாழ்.மத்திய கல் லூரி அணி விளையாடிய 7 போட்டிகளில் மூன்று போட் டிகளில் வெற்றி பெற்றுள்ள துடன் நான்கு போட்டிகளில் வெற்றி தோல்வியின்றி சம நிலை செய்துள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பங்குபற்றிய 7 போட்டி களில் இரண்டில் வெற்றியும் இரண்டு போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளதுடன் மூன்று போட்டிகளில் வெற்றி தோல்வியின்றி சமநிலை செய்துள்ளது.

ஆர்.யூ.பாலமுருகன்

ஆட்டநேரம் ஆரம்பம்

காலை 9.00 மணி - நண்பகல் 12.00 மணி
மதிய போசனம் நண்பகல் 12.00 -பிற்பகல் 12.40 மணி
ஆட்டம் பிற்பகல் 12.40 மணி -பிற்பகல் 2.40 மணி
தேநீர் பிற்பகல் 2.40 மணி - பிற்பகல் 3.00 மணி
ஆட்டம் பிற்பகல் 3.00 மணி - மாலை 4.00மணி



யாழ்.மத்திய கல்லூரி

அமர்ந்திருப்பவர்கள் (இ.வ) - ஈ.எஃப்.ஆர்.ஜெயகுமார் (பொறுப்பாசிரியர்),எஸ்.சுரேஸ் மோகன் (பயிற்சியாளர்),பி.டயான் (அணித்தலைவர்),எஸ்.பத்மநாதன் (அதிபர்), என்.நவநீத் (உப தலைவர்) கே.ஷெல்டன்,வி.எஸ்.மகேந்திரன் (உடற்கல்வி பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள் முதலாம் வரிசை (இ.வ) - பி.சிவஷங்கர், ரி.நிமல்ராஜ், ரி.சிவகரன், ஜே. ஆர்.டேனியல் நிதர்ஷன்,ரி.நிமால்காந்த்,எம்.ஸ்டீபன்ராஜ்,எஸ்.அலன்குமார், ஜீ.ஜெரிக் துசன்,கே.பிரதீபன்.

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை (இ.வ) - என்.ஜெனோசன், ஆர்.கோபிகன், என்.லவ நீதன்,எஸ்.ஜேம்ஸ்ஜான்சன், எஸ்.தனுஜன்.



சென்.ஜோன்ஸ் கல்லூரி

அமர்ந்திருப்பவர்கள் (இ.வ) - கே.எஸ்.முகுந்தன்(பயிற்சியாளரும் பொறுப் பாசிரியரும்), எம்.கரிப்பிரவீன் (அணித்தலைவர்), வண.என்.வீ.ஞானப்பொன்ராஜா (அதிபர்), வி.பிரணவன் (உப தலைவர்), கே.ஜனுசன், வீ.எஸ்.பி.துசிதரன் (உடற்கல்வி பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள் முதலாம் வரிசை (இ.வ) - ஈ.லாருஷன்,ஈ.தவநீதன் ,எஸ்.சுகதாஸ் , கே.அச்சுதன்,ஆர்.ஹஜீபன், கே.யோகீஸ்வரன் ,வீ.ஹரிவதனன்.

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை (இ.வ) - ஏ.விதுஷன், ஜே.ஆதிரியன், ரி.இவோன்ஷன், பி.ஜயந்தன், எஸ்.சுதாகரன், எஸ்.அலெக்ஸ்தியோன்.

'வடக்கின் பெரும் போர்'
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்

ருவின்ஸ் ஸ்ரார் றெஸ்ரோறன்ற்

விருந்துபசாரங்களுக்கான சகல உணவு வகைகளும் ஓடருக்குச் செய்து கொடுப்பதுடன் பரிசாரகளின் சேவையும் வழங்கப்படும்.

தொடர்பு:- இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7014
077 9227745

ஒருவன் ஒன்றை உண்மை என்று ஆராய்ந்து உறுதி செய்து விட்டால் அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனுக்கு ஏற்பட்டு விடும்.

–கெதே

வலம்புரி

துரியோதனனுடன் சேர்ந்த துரோணாச்சாரி போல பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும்...

அனைத்துக் கட்சிக் குழுவின் தொண்ணூறு வீதமான பணிகள் நிறைவடைந்து விட்டதாக அதன் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண லண்டனில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண நல்ல மனிதர் எனக் கூறக்கூடிய ஒருவர். தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதிலும், அவர்களின் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்படவேண்டுமென்பதிலும் அவர் இறுக்கமான கொள்கையை உடையவர்.

அதேநேரம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டுமென்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். இதனால் இன-மத-மொழி கடந்து அவர் ஓர் நல்ல மனிதர் என்ற பெருமைக் குரியவரானார்.

எனினும், அவர் சேர்ந்த கூட்டம் அவரின் நல் இயல்புகளுக்கு களங்கம் ஏற்படுத்தி விட்டதென்றே கூறவேண்டும்.

அதாவது துரியோதனின் சபையில் இருந்த துரோணாச்சாரியார் நீதி நெறி உணர்ந்தவர். பாண்டவர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமையை துரியோதனன் தடுத்து, கபளீகரம் செய்கிறான் என்பதை தெரிந்து கொண்டவர். இருந்தும் அவனின் சபையில் இருப்பதால் அவனுக்காக பேசியாக வேண்டும்.

யுத்தம் புரிந்தாக வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்த துரோணாச்சாரி போலவே பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் உள்ளார்.

இலண்டனுக்குச் சென்ற அவர் அனைத்துக் கட்சிக்குழுவின் தொண்ணூறு வீதமான பணிகள் முடிபடைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

அனைத்துக் கட்சிக்குழுவின் பணி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும். அப்படியானால் அந்தக்குழுவின்பணிகளில்தொண்ணூறு வீதமானவை முடிபுற்றுவிட்டன எனில் அதன் பொருள் இனப்பிரச்சினைக்கான தீர்வு நெருங்கி விட்டதென்பதாகும்.

ஆனால், இனப்பிரச்சினைக்கானதீர்வுகுறித்து இன்னமும் அரசு சிந்திக்கவில்லை என்ற நிலைப் பாடே உள்ளது.

இதுவே பொதுமக்களினதும் ஒட்டுமொத்த கருத்தும், அபிப்பிராயமும் ஆகும்.

நிலைமை இப்படியாக இருக்கும்போது அனைத்துக் கட்சிக்குழுவின் பணி இன்னமும் பத்து வீதமே மீதமுள்ளதென்னும் அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் கருத்து பொருத்தமற்றதாக இருப்பதுடன்,

மேற்படி கருத்தை இலண்டனில் வைத்து தெரிவித்திருப்பதன் மூலம் அரசின் ஏமாற்று கைக்கு பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் உடந்தையாக உள்ளார் என்ற நினைப்பையே பொது மக்கள் கொண்டிருப்பர்.

ஆக, நாட்டிலிருக்கக்கூடிய நல்ல மனிதர்களில் ஒருவரான திஸ்ஸ விதாரண, துரோணாச்சாரியார் போல நடந்து கொள்வது தமிழர்களுக்கு கெடுதியை விளைவிக்கும் என்பதால் அவர் நீதியின், நியாயத்தின் பொருட்டுசெயலாற்ற வேண்டுமென்பது தமிழ் மக்களின் தாழ்மையான வேண்டுதலாகும்.

அநுராதபுரம் தாக்குதல் குறித்த விசாரணையில் புதிய தகவல்

(கொழும்பு)

அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி 21 பேர் அடங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணி தாக்குதல் தொடுத்தபோது முகாமிலிருந்த வான்படையின் ஆயுதக் களஞ்சியத்தின் திறப்பு உரிய இடத்தில் இருக்காமையினால் படையினருக்கு உரிய ஆயுதங்களை வழங்க இயலாமல் போய் விட்டது என்று ஜவர் அடங்கிய விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது.

20 நிமிடங்களின் பின்னரே ஆயுதக் களஞ்சியத்தின் திறப்பைக் கண்டு பிடித்துள்ளனர் எனவும் அந்த விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

அந்த ஜவர் அடங்கிய விசாரணைக் குழுவில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்தகரன்னகொட, மேஜர் ஜெனரல் எம்.ஏ.எம்.பீரிஸ், ரியல் அட்மிரல் ஜே.ஏ.கொலம்பகே எயார் வைஸ் மார்ஷல், ரவி.அருந்தவநாதன், மேஜர் ஜெனரல் பி.எல்.பெர்னாண்டோ மற்றும் கொமாண்டர் கே.ஏ.எல் பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

தேநீர் இடைவேளையின் போது விடுதலைப் புலி உறுப்பினர்கள் அநுராதபுரம் வான் படைத் தளத்திற்குள் புகுந்துள்ளதாக குறிப்பிடும் விசாரணைக் குழுவானது விடுதலைப் புலிகளின் இரு விமானங்கள், முகாமின் மீது குண்டுகளை வீச வந்தபோது முகாமிலிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகள் செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் வான் படைத்தளப் பிரதேசத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டவுடனேயே அங்கு கவச வாகனத்துடன் உடனடித் தாக்குதல் அணியொன்று விரைந்துள்ளது.

அந்தக் குழுவை கடைட் அதிகாரி ஒருவர் வழி நடத்தியுள்ளார் என தெரிய வருகின்றது.

குறைந்த பட்சம் அந்த வாகனத்தில் தகவல் பரிமாற்றக் கருவியொன்று கூட இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய தாக்குதல் அணிக்கு அனுபவம் வாய்ந்த அதிகாரி ஒருவர் இருக்க வேண்டியுள்ளபோதிலும் அவ்வாறான ஒருவர் இருக்கவில்லை என்றும் அந்த விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

வான்படைத் தளத்தின் மூன்று இடங்களில் இருந்த படையினர், விடுதலைப் புலி உறுப்பினர்களின் பிரதேசத்தைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விட்டதால் விடுதலைப் புலிகளால் எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்தி மீது தாக்குதல் நடத்த முடியுமாக இருந்ததாகவும் காவலுக்கு அந்தப் படையினர் போதிய அளவு அனுபவம் உள்ளவர்கள் அல்ல என்றும் அந்த விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அநுராதபுரம் வான் படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் மூன்று குழுக்கள் வந்துள்ளதாகவும் மூன்றாவது குழுவானது தந்திரி மலையூடாக வன்னிக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும் அந்த ஜவர் அடங்கிய விசாரணைக்குழுவின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த விசாரணைக்குழுவானது வான் படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் 18 பேரிடம் வாக்கு மூலம் பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் அநுராதபுரம் தளத்தின் மீது தாக்குதல் தொடுத்தபோது விமான ஓட்டுதல் அனுபவம் கொண்ட குறூப் கப்டன் ஒருவரே முகாமின் கட்டளை அதிகாரியாக செயற்பட்டுள்ளார் என்றும் அந்தக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

விடுதலைப் புலிகளுடனான மோதலில் 2 படையினர் பலி; 12 பேர் காயம்

(கொழும்பு)

மணலாறு,மன்னார் மற்றும் முகமாலை உள்ளிட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளுடனான மோதல்களில் படையினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். 12 பேர் காயமடைந்துள்ளனர்.

மணலாறு கிரிபன்வேவ-ஜனகபுர வடக்கு ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோதல்கள் நிகழ்ந்தன.

இதில் இரு படையினர் கொல்லப்பட்டனர். மடுவுக்கு கிழக்காக உள்ள கரம்பைக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நிகழ்ந்த மோதலில் 3 படையினர் காயமடைந்துள்ளனர்.

மடுவின் சுற்றயல் பகுதிகளில் படையினரின் தாக்குதலின்போது ஆங்காங்கு மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

பாலம்பிட்டி சுற்றயல் பகுதியில் நேற்று பிற்பகல் 12.20 மணிக்கு விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி படைத்தரப்பை சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். முகமாலை பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 9.45 மணிக்கு நிகழ்ந்த மோதலில் படைத்தரப்பை சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். (ச)

அரசாங்கத்தின் அவதூறான பிரசாரங்களை தமிழ் மக்கள் எளிதில் நம்பமாட்டார்கள்

கூட்டமைப்பு எம்.பி. அரியநேத்திரன்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு இணைந்த தமிழர் தேசியத்தின் அடிப்படைக்கொள்கையை சிங்களப் பேரினவாதத்திடம் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறுமைப்பட்டு விடவில்லை. அவ்வாறான அவசியமும் ஏற்படப் போவதில்லையென்று அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழர் ஏமாற்று நடவடிக்கையான கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் அவதூறான பிரசாரங்களை தமிழ் மக்கள் அவ்வளவு எளிதில் நம்பி விட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் இதனால் அக்கட்சி பிளவுபடவுள்ளதாகவும் சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டிருந்தது தொடர்பாக கருத்துக்கேட்டபோதே அரியநேத்திரன் எம்.பி மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில், கடந்த 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் தற்போதைய நான்கு வருட காலத்திற்குள் இலங்கை அரசியல் கட்சிகளிடையே பல்வேறு மாற்றங்களை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் தமிழருக்கான தேசியக் கொள்கையிலும் தமிழ் உணர்வும் இணைந்திருக்கும் ஒற்றுமையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பை மிஞ்சிவிட முடியாது

வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் தேசியத்தின் அடிப்படைக்கொள்கையை சிங்கள பேரினவாதத்துடன் காட்டிக்கொடுக்க வேண்டிய தேவை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஏற்படப்போவதில்லை.

கூட்டமைப்பின் ஒற்றுமையையும் அதன் வளைந்து கொடுக்காத தன்மையையும் சயித்துக்கொள்ளமுடியாத சிங்கள பேரினவாத அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் விரித்திருக்கும் சூழ்ச்சி வலைகளுக்குள் தமிழ் தேசிய உணர்வாளன் மிளிர்ந்து விட மாட்டான் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு துரோகம் இழைத்துவரும் அரசாங்கத்திற்கும் நிமிடத்திற்கு நிமிடம் தமிழ் உயிர்களை பறித்துக்கொண்டிருக்கும் சிங்கள பேரினவாதத்துக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஆதரவு வழங்குவார்கள் என்ற எண்ணத்தை கனவிலும் விளக்கிக்கொள்ள வேண்டும் என அரசாங்கத்திற்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

கடந்த வருடத்திலும் இதே போன்ற தொரு பிரசாரத்தை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. இவ்வாறான ஏமாற்று பிரசாரங்களின் மூலம் தமிழரை ஏமாற்றி விட முடியாது.

இலங்கை அரசியல் வரலாற்றிலே தமிழனுக்கு துரோகம் இழைப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கும் சிங்களத் தலைமைகள் தற்போது வடக்கையும் கிழக்கையும் பிரித்து தமிழர் தாயகத்தை துண்டாடியது மட்டுமல்லாமல் அங்கிருக்கும் தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடுவதற்கான தேர்தல் ஒன்றையும் நடத்தவிருக்கிறது. இந்த தேர்தலின் ஊடாக அரசாங்கம் மேற்கொண்டுவரும் துரோகத் தன்மையை மூடிமறைப்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு எம். பி .க்கள் அரசுக்கு ஆதரவு என பொய்யானதும் அவதூறானதுமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது.

ஏனைய கட்சிகளைப்போல் தமது கட்சிக் கொள்கையில் இருந்து விளகிவிடவோ அல்லது பட்டம் பதவிகளுக்காக எமது இனத்தை அடிமையாக்கவோ ஒற்றுமைக்கும் தேசிய உணர்வுக்கும் உதாரணமான தமிழ் தேசிய கூட்டமைப்பு இடம் கொடுக்கப் போவதில்லை என்றார். (அ-5)

ஓலைச் சுவடிகள் 15

தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

திருநீறு அணிவது எதற்காக?

குளியலைப் போலவே திரு நீறணிவதும் அன்றாட வாழ்க்கையின் ஓர் முக்கியபாகமாக இருந்தது முற்காலத்தில்.

முழு நம்பிக்கையுடன் ஒரு சிட்டிகை திருநீறை எடுத்து நெற்றியில் வைத்த பின்னரே பண்டைய பக்தர்கள் ஜெபம் செய்வார்கள். ஜெபத்தில் நம்பிக்கை நிறைந் திருப்பது போலவே திருநீற்றிலும் மருத்துவ குணங்கள் நிறைந்திருக்கின்றன.

சுத்தமான திருநீறு தயாரிக்கும் முறை காலப்போக்கில் மாற்றமடைந்த போதி லும் பழைய முறைகளை கடைப்பிடிப்பவர்களுமுண்டு புல் மட்டும் அருந்தும் பசு வின் சுத்தமான எருவை சிவராத்திரி அன்று உமியில் எரித்துக் கிடைக்கும் சாம் பலை தண்ணீரில் கலக்கி மறுபடியும் உலர வைத்து சிவபெருமானுக்கு அபி ஷேகம் செய்தபின் நெற்றியி லிடுவதற்காக பாதுகாத்து வைக்கவேண்டும். திருநீறை நனைத்தும் நனைக்காமலும் அணிவதுண்டு. திருநீறணிந்தால் உடலின் துர்நீரை உறிஞ்சி எடுப்பதற்கும், உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கும், உடல் நிலையை மேன்மையடையச் செய்வதற்கும் வாய்ப்புண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தியாகத் தின் வடிவமான சிவபெருமானை மகிழ்விக்க மிகச் சிறந்தது திருநீறணிதல் என்று இந்து மதம் கருதியுள்ளது.

நெற்றி, கழுத்து, தோள், மூட்டு முதலிய இடங்களில் திருநீறணிய வேண் டும் என்று பொதுவாகக் கூறுவதுண்டு. திருநீறை நனைத்து அணிவதன் மூலம் உடல் வெப்பம் குறைவதனால் ஜுரம் பாதித்தவர்களின் நெற்றியில் நளைந்த திரு நீறு பூசினால் ஜுரம் இறங்குவதைக் காணலாம். மூலிகைச் செடிகளை சுத்தமான நெய் யில் ஹோம குண்டத்தில் வேகவைத்த பின் எஞ்சியிருப்பதை 'திருவிபூதி 'என அழைப்பதுண்டு.

அச்சுறுத்தலுள்ள எம்.பிக்கள் சர்வதேசத்திடம் முறையீடு

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சர்வதேச நாடாளுமன்றக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

சர்வதேச நாடாளுமன்றக் குழுவின் 118 ஆவது கூட்டத் தொடர் தற்போது தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் இடம்பெற்று வருகின்றது. இந்தக் குழுவிடம் இலங்கையில் இடம்பெற்று வரும் மோசமான மனித உரிமைகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்தும் முறையிடப்பட்டுள்ளது.

இதில் இலங்கையில் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கலந்து கொள்ளவுள்ளார். நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் விளக்கம் கோரப்படவுள்ளது. (ச-5)

இந்தியா தலையிட அனுமதியோம் மக்கள் விடுதலை முன்னணி அறிவிப்பு

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடக் கூடாது. இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கு நாம் ஒருபோதும்அனுமதிக்க மாட்டோம் என்று ஜே.வி.பியின் சர்வதேச தொடர்பு செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நோர்வேயில் கடந்த 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடைபெற்ற சமாதானத்திற்கான கருத்தரங்கில் உரையாற்றிய முக்கியஸ்தர்கள் மற்றும் நோர்வேத் தரப்பினர் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டினைக் கோரியிருந்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பி. எம்.பி. விஜித்த ஹேரத் மேலும் கூறியதாவது, இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்தும் நோர்வேயினதும் எரிக் சொல்ஹெய்மினதும் தலையீட்டை ஜே.வி.பி.; தேசப்பற்றாளர்களை இணைத்துக் கொண்டு தோல்வியடையச் செய்தது.

ஆனால் தோல்வி கண்ட நோர்வேயின் பிரிவினவாதச் செயற்பாடு மீண்டும் தலை தூக்கியுள்ளது.அண்மையில் ஒஸ்லோவில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா தலையிட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்கவும் இந்தியா துணை நின்றது என்றும் கூறப்பட்டது.

நோர்வேத் தரப்பினரின் இந்தக் கருத்து வெளிப்பாட்டுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து நிராகரிக்க வேண்டும். அதை விடுத்து நோர்வேக்கோ இந்தியாவுக்கோ அடி பணியக் கூடாது. அவ்வாறு அடிபணிந்தால் மீண்டும்எமது போராட்டங்களை முன்னெடுத்து நோர்வேயின் பிரிவினைவாதத் தலையீட்டைத்தோல்வியடையச் செய்வோம் என்றார்.(ச-5)

எனது தந்தையை ஏன் கொன்றார்கள்?...

தங்கக்கோவிலுக்கு சென்று பார்வையிட்டார். இதனையடுத்து வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் கொலையாளி நளினியைச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் மனம் விட்டுப் பேசினார்.

என் தந்தை நல்லவர் தானே? அவரை ஏன் கொன்றார்கள்? என்று நளினியிடம் அவர் கண்ணீர் விட்டுக் கதறினார். உணர்ச்சிக் கொந்தளிப்புக்களின் உச்சமாக இந்தச் சந்திப்பு இருந்தது.

இந்தச் சந்திப்பை உளவுத் துறையினரும் பொலிஸாரும் இரகசியமாக வைத்திருந்தனர். பிரியங்கா வருகை பற்றி பல்வேறு யூகங்கள் எழுந்து பரபரப்பு அடங்கிய நிலையில் கடந்த வாரம் பிரியங்காவின் வருகை விபரங்கள் மெல்லக் கசிந்தது.

நளினியை அவர் சந்தித்த விபரமும் வெளியானது. இதைத் தொடர்ந்து சென்னை வக்கீல் ராஜ்குமார் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பிரியங்கா – நளினி சந்திப்புக் குறித்துப் பல்வேறு தகவல்களைச் சிறை அதிகாரிகளிடம் கேட்டிருந்தார்.

இதன் மூலம் பிரியங்கா – நளினி சந்தித்தது உண்மையென உறுதிப்படுத்தப்பட்டது. நளினியின் தாய் பத்மா, நளினியின் வக்கீல்கள் எஸ்.துரைசாமி, இளங்கோவன் ஆகியோரும் பிரியங்கா – நளினி சந்திப்பை உறுதிப்படுத்தினார்கள்.

இந்தத் தகவல்கள் நேற்றுக் காலை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. டெல்லி வட்டாரத்திலும் இந்தத் தகவல் அதிர்ச்சி, ஆச்சரிய அலைகளை ஏற்படுத்தியது. ரீராஜீவ் கொலையாளி நளினியை பிரியங்கா சந்தித்தது உண்மைதானா? ஏன் சந்தித்தார்? என்பதை அறிய பத்திரிகை நிருபர்கள் சோனியா வீட்டுக்குப் படை எடுத்தனர்.

இதையடுத்து நளினியைச் சந்தித்தது உண்மைதான் என்று பிரியங்கா ஒத்துக் கொண்டார். இது தொடர்பாக நேற்றுக் காலை அவர் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்குப் பேட்டியளித்தார். அதில் பிரியங்கா கூறியதாவது,

வேலூர் மத்திய சிறையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி நான் நளினி சிறிகரனைச் சந்தித்துப் பேசியது உண்மைதான். இது முழுக்க முழுக்க தனிப்பட்ட பயணம் என்பதனை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நளினியைச் சந்தித்துப் பேச வேண்டும் என்பதும் முழுக்க முழுக்க நானே சொந்தமாக எடுத்த முடிபாகும்.

வேறு யார் சொல்லியும் நான் வேலூர் சென்று அவரைச் சந்திக்கவில்லை. எனது இந்தச் சந்திப்பை உரிய முறையில் அனைவரும் கௌரவித்தால் நான் மிகமிக நன்றியுடையவளாக இருப்பேன்.

எனக்குக் கோபத்திலோ வெறுப்பிலோ வன்முறையிலோ கொஞ்சமும் நம்பிக்கையில்லை. இவை எதுவும் என் மீது ஆதிக்கம் செலுத்த நான் ஒருபோதும் அனுமதித்ததில்லை. வன்முறையால் மாபெரும் இழப்பை நான் என் வாழ்வில் அனுபவித்து விட்டேன்.

இதனால் என் மன அமைதி போய் விட்டது. மனத்தை அமைதிப்படுத்தும் முயற்சிகளில் நான் ஈடுபட்டுள்ளேன். மன அமைதிக் காகத்தான் நான் வேலூருக்குச் சென்று நளினியைச் சந்தித்தேன். அது என் இழப்புக்கு ஆறுதலாக இருந்தது. இவ்வாறு பிரியங்கா கூறியுள்ளார்.

பிரியங்கா – நளினி சந்திப்பு குறித்து ராகுல் காந்தியிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அதற்கு ராகுல் கூறியதாவது,

வன்முறைக்கு எங்கள் தந்தை கொல்லப்பட்டது குறித்து நானும் என் சகோதரியும் பல தடவை விவாதித்திருக்கின்றோம். விரிவாக நாங்கள் பேசியுள்ளோம். நாங்கள் யார் மீதும் வெறுப்பைச் சுமந்து கொண்டிருக்கவில்லை.

யாரை நினைத்தும் நாங்கள் கோபத்தில் இல்லை. நளினியைச் சந்தித்துப் பேச வேண்டும். இதற்காக வேலூர் செல்ல வேண்டும் என்று பிரியங்கா கூறினார். கடந்த சில மாதங்களாக அவருக்கு இந்த விரும்பம் அதிகரித்திருந்தது.

அதுபோலவே நடந்துள்ளது. என் தந்தையைப் படுகொலை செய்தவரை பிரியங்கா சந்தித்துப் பேசியதை நான் வேறு கோணத்திலிருந்து பார்க்கின்றேன். இதில் எனக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. இவ்வாறு ராகுல் காந்தி கூறினார். (ச-2,5)

மடுத் தேவாலயத்தைப் பாதுகாக்...

கொண்டுவந்துள்ளோம்.

சர்வதேச சமூகத்துடன் இணைந்து மடுத் தேவாலயத்தை படையினர் தாக்குதலில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி சொல் ஹெய்முக்கு கடந்த வாரம் கடிதமொன்றை அனுப்பியுள்ளேன்.

இது தொடர்பாக இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர், தூதுவர் ரொறி ஹட்றீம் ஆகியோரின் ஊடாக எமது கோரிக்கையை இணைத்தலைமை நாடுகளிடம் முன்வைத்துள்ளோம்.

மடுத் தேவாலயத்தை பாதுகாப்பது தொடர்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். இவ் விடயம் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை, ஹியுமன் றைட்ஸ் வோச் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களிடமும் எமது கோரிக்கையை முன்வைத்துள்ளோம் என்றார். (ச-5)

அமெரிக்காவின்...

மேற்கொள்ளவும் அமெரிக்காவுக்கு முக்கிய பங்கு இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரவு- செலவுத் திட்டத்தின்படி 2009 ஆம் ஆண்டுக்கான இலங்கைக்கான பொருளாதார உதவியாக 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.2008 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு 7,397 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 23,166 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருந்தன.

2008ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில், அமெரிக்க அரசாங்கம் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இலங்கைக்கான உதவித் தொகையை 897 ஆயிரம் அமெரிக்க டொலர்களால் குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

இலங்கை...

இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதுடன் இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, அதற்கான அனுசரணைப் பணிகளை வழங்குமாறு விரைவில் எம்மிடம் கோரிக்கை விடுப்பார்கள் என நாங்கள்எதிர்பார்க்கின்றோம். என பௌயர் கொழும்பு ஆங்கில ஊடக மொன்றிடம் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு அழைத்து வந்து மத்தியஸ்தம் வகிக்க இந்தியா நடவடிக்கை எடுக்குமாயின் நாங்கள் அனுசரணைப் பணியிலிருந்து விலகிக் கொள்வோம்.

நாங்கள் ஒருபோதும் இலங்கை அரசாங்கத்துக்கு தீங்கிழைக்க மாட்டோம். இந்தியா அனுசரணைப் பணியாற்றுமாயின் அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் தற்போது காணப்படும் நிலைமைகள் தொடர்பாக அந்த ஊடகத்திடம் கருத்து தெரிவிக்க மறுத்திருக்கும் ஜோன் ஹன்சன். எனினும் மூன்றரை தசாப்த காலங்களாகத் தொடர்ந்துவரும் மோதல்கள் விரைவில் முடிபுக்கு வரும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச-5)

யாழ்.முன்னரங்கப் பகுதியாக...

ஈழப் போர் இதுவரை கண்டிராத உக்கிர யுத்த முனையொன்றை வட போர் அரங்கு காணப்போகின்றது என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கொழும்பில் வெளிவரும் நாளேடு ஒன்றுக்கு கருத்து ரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு குண்டுவெடிப்பில் அமைச்சர் ஜெயராஜ் கொல்லப்பட்டதன் பின்னர் சர்வதேச நாடுகள் பேச்சுமூலமான தீர்வுக்கு வலியுறுத்தின. ஆனால் மகிந்த ராஜபக்ஷவும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் முன்னரை விட உறுதியாக போரை முன்னெடுப்போம் என சூளுரைத்துள்ளனர்.

தற்போது மன்னார், மணலாறு முனைகளில் படிப்படியான முன்னேற்றத்துடன் எதிரிகளை அழித்து வரும் எமது படைகள் யாழ். முன்னரங்கில் ஈழப்போர் இதுவரை சந்திக்காத படையெடுப்பு ஒன்றை ஆரம்பிக்க இருப்பதாக இராணுவத் தளபதி சூளுரைத்துள்ளார்.

இப்போர் முனை மன்னார், மணலாறு யுத்த முனைகளைப் போல் படிப்படியானதாக இல்லாமல் பாரிய சடுதியான பிரமாண்டமான தாக இருக்கும். யாழ்.முனையில் சில மாதங்களுக்கு முன்னர் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இருந்தோம்.

ஆனால் புலிகள் அதை எதிர்பார்த்திருந்ததால் நாம் மன்னார்,மணலாறுக் களமுனைகளைத் திறந்து புலிகளைச் சண்டைக்கு இழுத்து அழித்து வருகின்றோம். இப்போது யாழ்.முனையைத் திறப்பதற்கான காலம் வந்து விட்டது.

சரியான நேரம் இன்னும் குறிக்கப்பட வில்லை. ஆனால் யாழ்.யுத்த முனை திறப்பது உறுதி. தனியான ஒரு முனையில் மட்டுமல்லாமல் கிளாலி முதல் நாகர்கோவில் வரை பரந்து தாக்கப்படும்.

புலிகள் 3 முனைகளிலும் தாக்கு பிடிக்க முடியாது திணறுவார்கள் என படைத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 2006 ஆம் ஆண்டு ஒக்டோபரில் பிழையான நேரத்தில் ஆனையிறவை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிபடைந்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளார் இராணுவத்தளபதி.

2006 புலிகள் மாவிலாற்றில் சாட்டுக்குத் தாக்கிக் கொண்டு யாழில் திடீரென தாக்குதல் தொடுத்ததால் ஆரம்பத்தில் சிறிது பின்வாங்க வேண்டி வந்தது. பின்னர் மேலதிகமாக புலிகளின் பகுதியில் 400 மீற்றர் தூரம் வரை கைப்பற்றியுள்ளோம் என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறி கூறியுள்ளார்.

55,53 படையணிகள் குறுகிய காலமாக சிறுசிறு தாக்குதல்கள் மூலம் எதிரியின் பகுதியில் தினமும் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. இப் படைப் பிரிவுகளும் இயந்திரப் படைப் பிரிவும் யாழ்.யுத்த முனையைத் திறக்க வுள்ளபடைநடவடிக்கையில்பயன்படுத்தப்படுவர்.

யாழ்.குடாநாடு எப்போதும் எங்களது முதல் கரிசனைக்குட்பட்ட பிரதேசம். தாக்குதல் டிவிசன்களாக 55-வது டிவிசன்,53-வது டிவிசனைத் தவிர 51 -வது டிவிசன் வலிகாமத்திலும் 53 -வது டிவிசன் வரணியிலுமாக 33 ஆயிரம் படையினரும் பொலிஸாரும் வான் படை, கடற்படை என 8 ஆயிரம் படையினருமாக 41 ஆயிரம் படையினரின் கட்டுப்பாட்டில் யாழ்.குடாநாடு உள்ளது.

எங்களது இயந்திரப் படையணி துரித வேகத்தில் ஆனையிறவை அடைய முடியும். இவ்வாறு பல திட்டங்கள் இராணுவத்தினரால் போடப்பட்டது என படைத் தளபதி கொழும்பு நாளேட்டுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மன்னார் களமுனை திறக்கப்படுவதற்கு முன்னரும் இவ்வாறான ஓர் செய்தி வந்தது. எனவே இச்செய்தியை வெறும் பிரசார உத்தி என புறந்தள்ள முடியாது. தமிழ் மக்கள் தற் போது சந்தித்து வரும் போரைவிட மிகக் கொடிய யுத்தம் ஒன்றை எதிர் கொள்ள வேண்டியுள்ளவர்களாக இருக்கின்றனர். தமிழரைப் பொறுத்தவரையில் அரசினால் மேற்கொள்ளப்படும் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே விடிவு என இராணுவத் தளபதி கூறினார். (ச-5)

மோட்டார் சைக்கிள்கள் உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள

❖Hero Honda CD 100 SS ❖MD - 90

வகை மோட்டார் சைக்கிள்கள் உடன் தேவை.

தொடர்பு:- விளம்பர இல. -006

வலம்புரி

இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம். அல்லது,

021 222 3378, 021 222 7829

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.